அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 28.02.2023 supeedsam.com supeedsam@gmail.com

## மாதவனை, மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரம்;
# பெரும்பான்மையினத்தவரால் உயிர் அச்சுறுத்தல்



மாதவனை மயிலத்தமடு மேச்சல் தரை விவகாரத்தால், பண்ணையாளர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாக மட்டக்களப்பில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக மயிலத்தமடு மாதவனை பகுதியில் நடமாடும் கால்நடைகள் மீது துப்பாக்கிச் சூடும் வெட்டுக்கா யங்களும் ஏற்பட்டு,

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ்- முஸ்லிம் உறவை உடைக்கும் முயற்சியில் ஈடுபடும் ரணில்



100 ஏக்கர் காணியை முஸ் லிம் மக்களிற்கு பகிர்ந்தளிக்க எடுக்கும் முயற்சி தமிழ் முஸ்லிம் உறவை உடைக்கும் ரணிலின் முயற்சி என நாடாளுமன்ற உறுப் பினர் எஸ்.சிறிதரன் தெரிவித் துள்ளார்.

கிளிநொச்சி தமிழரசு கட்சி அலுவலகத்தில் அவர் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செய லாளர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் காணி சீர்திருத்த குழுவிற்கு

02 ஆம் பக்கத்தில்...

## 13ஐ விட 13 பிளஸ் வேண்டும்:
### மஹிந்தவும் பச்சைக் கோடி!

‘அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நான் எதிர்க் கவில்லை.13ஐ விட 13 பிளஸ் வேண்டும் என்பதே எனது நிலைப் பாடு. ஆனால், நாட்டின் தற்போ தைய நிலைமையில் 13 தொடர் பில் பேசுவதை நிறுத்த வேண் டும்.'என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## மீண்டும் பிரதமர் பதவியை ஏற்கும் ஆசை எனக்கு இல்லை



பிரதமர் பதவியை மீளப் பொறுப்பேற்கவுள்ளேன் என்று வெளிவரும் செய்தி தொடர்பில் கருத்துக் கூற நான் விரும்பவில்லை. நான் பிரதமர் பதவியிலி ருந்து விலகியதே தவறு. என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

பிரதமராக மஹிந்தவை மீளவும் நியமிப் பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வினர் வெளியிடும் கருத்துக்கள் தொடர்பில் மஹிந்த ராஜபக்சவிடம் கொழும்பு ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியிருந்தது.

02 ஆம் பக்கத்தில்...

## மஹிந்தவினால்தான் மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள்



வசந்த முதலிகே விளக்கமறியலில் வைக்கப்பட்ட போதும் நாடாளுமன்றத்திற்கு தீவைக்க கூறிய லால் காந் தவிடமும், ஹந்துன்நெத்தியிடமும் வாக்குமூலம் பெறப்ப டவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## வசந்த முதலிகே உள்ளிட்ட 61 பேர் பிணையில் விடுதலை!

பத்தரமுல்லையில் உள்ள கல்வி அமைச்சுக்குள், பலவந்தமாக நுழைய முயற்சித்த குற்றச்சாட்டில் கைதான அனைத்துப் பல்கலைக்கழக மாண வர் ஒன்றிய இணைப்பாளர் வசந்த

02 ஆம் பக்கத்தில்...

## தேசிய மக்கள் சக்தியின் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கோண்ட ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு



கொழும்பில் நேற்று இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் ஆர்ப்பாட் டத்தில் கலந்து கொண்ட நிவித்திகல வேட்பாளர் கொழும்பு வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று பிற்பகல் உயிரிழந்துள்ளார்.

கண்ணில் ஏற்பட்ட காயம் காரண மாக தீவிர சிகிச்சை பிரிவில் அனும திக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை யின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தி ருந்தார். இதேவேளை காயமடைந்த 28 பேர் வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டிருந்தாக தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா சிகிச்சை யின் பின்னர் சிலர் வெளியேறியுள்ள தாக குறிப்பிட்டுள்ளார்.

"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH



Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma :34598
25605: cicero

## மகிந்தவை விட்டு விலகும் சகாக்கள்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள் சிலர், மஹிந்த ராஜப க்ஷவை விட்டு விலகும் நிலை ஏற்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ச பிரதமராக இருந் தபோது, பாராளுமன்ற சிற்றுண்டிச்சா லையில்

02 ஆம் பக்கத்தில்...

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி






**(ரக்ஸனா)**

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி வெள்ளிக்கிழமை (24.02.2023) மாலை பாடசாலை மைதானத்தில் இடம் பெற்றது.

பாடசாலை அதிபர் எஸ்.மதிசுதன் தலைமயில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.குலேந்திரகுமார் கலந்து கொண்டதுடன், சிறப்பு அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.ஹரிஹரராஜ், கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.தில்லைநாதன் மற்றும், அயல் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் , மாணவர்களின் அணிநடை, உடற்பயிற்சி கண்காட்சி, கோலூன்றிப் பாய்தல், மற்றும், சுவட்டு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இந்த வருட இல்ல விளையாட்டுப் போட்டியில் குறிஞ்சி இல்லம் 549 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், முல்லை இல்லம் 532 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், மருதம் இல்லம 503 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. இதன்போது வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும், வெற்றிக் கேடயங்களும், அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.



கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் நேற்று (26) திருகோணமலையில் நடைபெற்ற சதுரங்க விளையாட்டுப் போட்டியில் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளீர் தேசிய பாடசாலை மாணவிகள் 1 வது இடத்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது. **(படங்கள் - அ . அச்சுதன்)**



அகில இலங்கை ரீதியில் திருகோணமலையில் சிறுவர் பாராளுமன்ற உறுப்பினராக திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் தரம் 09 இல் கல்விகற்கும் மாணவி சஸ்ரிகா உமாராஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
அவருக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று (27) கல்லூரி அதிபர் திருமதி லிங்கேஸ்வரி ரவிராஜன் தலைமையில் இடம் பெற்றது.

**(படங்கள் - அ . அச்சுதன்)**

## வசந்த முதலிகே உள்ளிட்ட 61 பேர் பிணையில்..

முதலிகே உள்ளிட்ட 62 பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை நேற்று (27) கடுவலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 23ஆம் திகதி பத்தரமுல்லையில் உள்ள கல்வி அமைச்சுக்குள், பலவந்தமாக நுழைய முயற்சித்த அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய இணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட 62 பேர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஹோமாகம பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தை, திறக்குமாறு வலியுறுத்தி, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் இவ்வாறு கல்வி அமைச்சுக்கு சென்றிருந்தனர். இதனையடுத்து, கைது செய்யப்பட்ட 62 பேரும் கடந்த 24ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்தநிலையில், இன்றைய தினம் குறித்த நபர்களை கடுவலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது அவர்களை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

## மகிந்தவை விட்டு விலகும் சகாக்கள்

அவருடன் சாப்பிடுவதற்கு எம்.பி.க்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர், ஆனால் தற்போது அவர் பெரும்பாலும் தனியாகவே சாப்பிடுகிறார்.

அவர் பிரதமராக இருந்த காலத்தில், பாராளுமன்றத்துக்கு வந்தபோது, அவரை வரவேற்க ஏராளமான எம்.பி.க்கள் கூட்டம் நுழைவு வாசல் அருகே திரண்டிருந்த நிலையில், இன்று அவர் பாதுகாப்பு பொலிஸ் அதிகாரியுடன்தான் பாராளுமன்ற வளாகத்திற்குள் நுழைகிறார்.

அவருக்கு மிக நெருக்கமான இரண்டு அல்லது மூன்று எம்.பி.க்கள் மட்டுமே அவ்வப்போது அவருக்கு நெருக்கமாக இருப்பதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதற்கு காரணம் அந்த எம்.பி.க்கள் ஜனாதிபதியுடன் நெருங்கிய உறவை வைத்துக்கொள்ள ஆர்வமாக உள்ளனர் என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது

## மஹிந்தவினால்தான் மக்கள் நிம்மதியாக...

இது அனுரவின் டீல், இது எப்படி நடந்தது என முடிந்தால் அனுர பதில் கூறட்டும் எனவும் சவால்விடுத்துள்ளார்.

திஸ்ஸமஹாராம மகளிர் தொகுதி கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில் 2009 அல்லது 2010 இல் திஸ்ஸமஹாராமவில் நடைபெற்ற பிரதான கூட்டத்தில் உரை நிகழ்த்த வந்தேன். அன்றும் நான் ஜே.வி.பி பற்றிப் பேசினோம்.

இன்று பெருந்தொகையான மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. ஜனநாயகம் பற்றி அநுரவின் கட்சியால் மாத்திரம் தான் பேச முடியுமா? அவ்வாறு நினைத்துத் தான் அவர் செயற்படுகிறார்.

அவர் அவதூறு பேசலாம், பொய் சொல்லலாம், கூட்டங்கள் நடத்தலாம், ஆனால், கூட்டம் நடத்தி, நாம் ஏதாவது சொன்னால், அனைவரும் தம்மைக் குறை சொல்வதாக கூறுவார்.

மகிந்த ராஜபக்ச நாட்டைக் காப்பாற்றிய தலைவர் என்பதாலேயே இந்நாட்டு மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள்.அவரை தெற்கில் இருந்து தான் நாடாளுமன்றத்திற்கு அனுப்பினீர்கள். தெற்கு மக்களுக்கு என்றென்றும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

கடந்த 2005ஆம் ஆண்டில் 180,000 வாக்குகளால் வெற்றி பெற்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கடந்த 2010ஆம் ஆண்டில் இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அவர் ஆற்றிய பணியினால் நாங்கள் வீதிகளை நிர்மாணித்தோம்.

அவரின் ஆட்சியில் நெடுஞ்சாலைகளை அமைத்தோம். இப்போது மக்கள் விடுதலை முன்னணிக்கு மூன்று நான்கு மணித்தியாலங்களில் கதிர்காமம் செல்லக்கூடிய நெடுஞ்சாலைகளை அமைத்தது அவர்தான்.

காலிமுகத்திடலில் வைத்து அடி, கொல்லு என்று அநுர திஸாநாயக்க கூறினார். பிரதமர் அலுவலகத்தை பிடித்தனர்.ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றினர். பிரதமரின் இல்லத்தை தீயிட்டு நாடாளுமன்ற சந்திக்கு சென்று லால்காந்த என்ன சொன்னார்.

நாடாளுமன்றத்தை சுற்றிவளைக்க சென்னார். வசந்த முதலிகே விளக்கமறியலில் வைக்கப்பட்டார். ஆனால் சுனில் ஹதுன்னெத்தியோ அல்லது லால்காந்தாவோ பொலிஸில் சென்று வாக்குமூலம் கொடுக்காது தப்பினர்.

இதற்கு அனுர திசாநாயக்க பதில் கொடுப்பாரா?, அநுர உண்மையான டீல்காரர். வசந்த முதலிகே மட்டும் சிறைக்கு சென்றார்.

லால்காந்தவும் சுனில் ஹந்துன்நெத்தியும் பொலிஸிக்குக்கு கூட செல்லவில்லை. முடிந்தால் இதற்கு பதில் சொல்லட்டும் என தெரிவித்துள்ளார்.

## மாதவனை, மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரம்;

இறந்துள்ள நிலையில், பண்ணையாளர்கள், தங்களுக்கும் ஏதும் உயிர் ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளனர்.

கடந்த காலங்களாக மாதவனை மயிலத்தமடு மேச்சல் தரை பகுதியில், பெரும்பான்மையினத்தவர்களின் அத்துமறிய குடியேற்றம் பேசு பொருளாக இருந்த நிலையில் தற்போது அது மீண்டும் தலை தூக்கி உள்ளது.

மாதவனை மயிலத்தமடு பகுதியில் பெரும்பான்மையினர் அத்துமீறி குடியேற முடியாத நிலையில் நீதிமன்றத் தடை உத்தரவு இருக்கின்ற நிலையிலும் குறித்த பகுதியில் பெரும்பான்மை இனத்தவர்கள் சோழன் கச்சான் பயிர்செய்கை மேற்கொண்டு வருவதுடன் நீதிமன்ற சட்டத்தை மதிக்காமல் செயல்பட்டு வருகின்றார்கள் என அப்பிரதேசத்தில் வசிக்கும் தமிழ் மக்கள் தெரிவித்துள்ளனர்.

பயிர்செய்கையில் ஈடுபடுபவர்கள் மேய்ச்சல் தரைக்காக ஒதுக்கப்பட்ட காணிகளுக்குள் அத்துமீறி பயிர்செய்வதனால் அப்பகுதிக்குள் நுழையும் கால்நடைகள் துப்பாக்கி சூட்டிற்கும் வெட்டுக்காயங்களுக்கும் உள்ளாகி உயிரிழந்துள்ளன.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் தலைமையில் குறித்த குடியேற்றமானது திட்டமிட்டு திணிக்கப்பட்டிருந்த போதிலும் பண்ணையாளர்களின் முயற்சியாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்கு பெற்றலுடனும் வழக்கு தொடரப்பட்டு சிங்கள குடியேற்றத்திற்கான தடை உத்தரவு எடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் இன்று மீண்டும் பெரும்பான்மை இனத்தவர்களின் அத்து மீறிய செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. மட்டக்களப்பு மாவட்ட தற்போதைய அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா கடந்த காலங்களில் மாதவனை மயிலத்தமடு பகுதிக்கு சென்று அவர்களுடைய பிரச்சினைகளை கேட்டு அறிந்து, பண்ணையாளர்களுக்கு சார்பாக செயற்படுகின்றார் என்ற காரணத்தினால் அரசாங்க அதிபர் பதவியில் இருந்து இடமாற்றப்பட்டார்.

இந்நிலையில், அவர் தற்போது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக வந்திருக்கின்ற போதும், பெரும்பான்மையினத்தவர்களின் அத்துமீறிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தலைமையிலான குழுவினர் சென்று இந்த பிரச்சனைக்கு உடனடியாக தீர்வை பெற்று தருவதாக கூறி இருந்தும் அவர்களாலும் பண்ணையாளர்கள் ஏமாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற சட்டத்தை மீறி நீதிமன்றத்தை அவமதிக்கும் விதத்தில் பேரினவாத இனத்தவர்கள் மேய்ச்சல் தரைக்காக ஒதுக்கப்பட்ட காணிகளை அத்துமறி பிடித்து அதனுள் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு கால்நடைகளின் வாழ்வாதாரத்தை இல்லாது ஒழிக்கும் ஒரு செயற்பாட்டாக உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயத்தையும் மீன்பிடியையும் கால்நடையையும் நம்பி இருக்கின்ற ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் ஒரு செயற்பாடாகவே பார்க்கப்படுகின்றது எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் ஒரு இன வன்முறையை தூண்டும் அளவிற்கு இந்த விவகாரம் செல்லும் என்பதில் எவ்வித அச்சமுமில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

ஆகவே இந்த மேய்ச்சல் தரை விவகாரம் தொடர்பாகவும், மகாவலி பிரச்சினைக்கும் மாவட்டத்திலுள்ள அரசியல்வாதிகள், மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் ஒரு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் இதன் விளைவுகள் பாரதூரமாக இருக்கும் என்றே கூற முடியும் எனவும் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். ஆகவே வயிற்று பிழைப்புக்காக செல்லும் பண்ணையாளர்கள் மிகவும் அச்சத்தில் உள்ளதுடன் அவர்களுடைய உயிர்களுக்கும் உத்தரவாதம் இல்லாத நிலை தான் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் மாதவனை மயிலத்தமடு மேச்சல்த்தரை விவகார கள நிலவரம் தொடர்பாக உடனுக்குடன் செய்திகளை ஊடகங்கள் வழங்கிக் கொண்டிருக்கின்ற நிலையிலும், சிறிலங்கா அரசாங்கம், பண்ணையாளர்களின் பிரச்சினைகளுக்கு இன்னும் ஒரு முற்றுப்புள்ளி வைக்காதது பெரும் மனவேதனையாக இருக்கின்றது என்று பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## 13ஐ விட 13 பிளஸ் வேண்டும்: மஹிந்தவும்...

கண்டியில் கடந்த வெள்ளிக்கிழமை கருத்து வெளியிட்ட மஹிந்த ராஜபக்ச,

13ஆவது திருத்தச் சட்டம் தேவையில்லை என்று குறிப்பிட்டிருந்தார். நீங்கள் கடந்த காலங்களில் 13 பிளஸ் எனத் தெரிவித்து விட்டு இப்போது அது தேவையில்லை என்று குறிப்பிடுவதற்கான காரணம் தொடர்பில் மஹிந்தவிடம் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

'எரிகின்ற வீட்டில் பெற்றோல் ஊற்ற நான் விரும்பவில்லை. 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துக்கு எதிராக தேரர்கள் வீதியில் இறங்கியுள்ளனர்.

இந்நிலையில், 13 ஐ ஆதரிக்கும் கருத்தை நான் தற்போது வெளியிட்டு நிலைமையை மோசமாக்க விரும்பவில்லை. அதற்காக அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு நான் எதிர்ப்பு என்று அர்த்தமல்ல. 13ஐ விட 13 பிளஸ் வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு.

தேசிய இனப்பிரச்சினைக்கு புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வைக் காண வேண்டும். தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும். இந்த நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை' என தெரிவித்தார்.

## தமிழ்- முஸ்லிம் உறவை உடைக்கும் முயற்சியில் ஈடுபடும் ரணில்

சொந்தமான 100 ஏக்கர் காணிகளில் உடனடியாக முஸ்லிம் சகோதரதர்களை குடியேற்றுவதற்கான திட்டம் ஒன்றை ரணில் அரசாங்கம் தன்னுடைய முகவராக இருக்கின்ற ஆளுநருக்கூடாக செயற்படுத்த முனைவதாக நாங்கள் அறிகின்றோம்.

மிக முக்கியமாக, யாழ்ப்பாண மாவட்டத்திலே 12ஆயிரம் பேர் காணியற்றவர்களாக இருக்கின்றார்கள். 4000பேர்வரையானவர்கள் சொந்த இடம் இல்லாமல் இருக்கின்றார்கள். இந்த நிலையில் கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடைப்பட்ட தோம்புமுறையிலான சட்டங்களைக்கொண்ட பச்சிலைப்பள்ளி பகுதியில் ஆதி காலங்களில் அதிக காணிகளை வைத்திருந்த தமிழ் மக்களிடம் பெறப்பட்ட காணிகள் காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் காணி வங்கி ஒன்றில் சேகரித்து வைக்கப்பட்டிருந்தது.

இப்பொழுது குறித்த காணியில் முஸ்லிம்களை குடியமர்த்துவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதன் அடிப்படை நோக்கமானது தமிழ் மக்களிற்கும் முஸ்லிம் மக்களிற்குமிடையில் மிகப்பெரிய விரிசலை ஏற்படுத்துவதற்கான மிகப்பெரிய கைங்கரியத்தை மிகப்பெரிய தந்திரசாலியான ரணில் விக்ரமசிங்க கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார். அதன் முதல் கட்டம்தான் பச்சிலைப்பள்ளி பகுதியில் 100 ஏக்கர் காணிகளை முஸ்லிம் சகோதரர்களிற்கு வழங்க எடுக்கின்ற முயற்சி. நான் முஸ்லிம் சகோதரர்களிடம் பகிரங்கமாக ஓர் வேண்டுகோளை விடுக்கின்றேன். தமிழ் மக்களிடமும், முஸ்லிம் மக்களிடமும் இன்றும் சுமுகமான உறவு நிலை ஏற்படாத சூழல் காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் இரண்டு பகுதியினாலும் ஏற்பட்ட காயங்கள் இதற்கு காரணமாகின்றது. புலிகள் முஸ்லிம் சகோதரர்களை இங்கிருந்து அனுப்பினார்கள் என்ற செய்தியை அவர்கள் சொல்லிக்கொண்டதும், யுத்தம் நிறைவு பெற்ற பின்னர் தமிழ் மக்கள் எவரும் கொலை செய்யப்படவில்லை எனவும், முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் 2021ம் ஆண்டு ஐக்கிய மனித உரிமைகள் பேரவையில் சென்று தமிழ் மக்களிற்கு எதிராக கோசம் எழுப்பிய நாட்களும் உண்டு.

அதேபோல, தான் தமிழ் மக்களின் காணிகளை பறித்தேன் எனவும், ஆயுத குழுக்களை உருவாக்க தமிழ் மக்களை அழித்தேன் எனவும் அவர்களின் இடங்களை அழித்தேன் எனவும் கிஸ்புல்லா குறிப்பிடுகின்றார்.

அதேவேளை கல்முனையில் தமிழ் மக்கள் நூற்றுக்கு நறுவீதம் வாழுகின்ற பிரதேச செயலகத்தை தரமுயர்த்தவதற்கு முஸ்லிம் காங்கிரசும் சில முஸ்லிம் சகோதரர்களும் தடையாக இருக்கின்றார்கள். இவ்வாறான சூழ்நிலைகள் இருக்கின்றபொழுது, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் கிட்டத்தட்ட 400 முஸ்லிம் குடும்பங்களை 100 ஏக்கர் காணியில் குடியேற்ற முனைதல் என்பது அடிப்படையில் தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரச்சினை உடையவர்களாக மாற்றுவதற்கும், தொடர்ந்தும் அவர்களிற்கிடையில் பிரச்சினை எழுவதற்கான களத்தை ரணில் விக்கிரமசிங்க ஈடுகிறார் என்பது வெளிப்படையானது.

ஏப்ரல் 21ல் தேவாலயங்களில் வெடித்த குண்டுவெடிப்பினால் உயிரிழந்தவர்களும் தமிழர்கள். அதன் ஆறாத வடுக்கள் இன்றும் உள்ளது. சகரான் மூலமாக அந்த தாக்குதல் இடம்பெற்றிருந்தாலும், அதன் இலாபங்களை கோட்டபாயவும், அவர்கள் குடும்பமும் அனுபவித்தாலும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

## மீண்டும் பிரதமர் பதவியை ஏற்கும் ஆசை...

அதற்கு அவர் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த வருடம் மே 9 ஆம் திகதி நாட்டின் நிலைமையைக் கருத்தில்கொண்டே பிரதமர் பதவியிலிருந்து விலகினேன். அந்தக் கசப்பான சம்பவத்தை மீள நினைவுபடுத்த நான் விரும்பவில்லை. மீண்டும் பிரதமர் பதவியை ஏற்கும் ஆசை எனக்கு இல்லை. எனினும், நாடாளுன்றத்தில் உள்ள பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து மீண்டும் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்குமாறு என்னிடம் கோரிக்கை விடுத்தால் அது தொடர்பில் அந்த நேரம் தீர்க்கமான முடிவு எடுப்பேன் – என்றார்.

# மயிலத்தமடு பிரதேசத்தில் மீண்டும் தலைதூக்கியுள்ள பெரும்பான்மை இனத்தவர்களின் கைவரிசை



மட்டக்களப்பு மாவட்டம் மயிலத்தமடு மற்றும் மாதவனைப் பகுதியில் அமைந்துள்ள மேச்சல்தரைப் பகுதயில் தமிழ் மக்கள் தமது பரம்பரை பரம்பரையாக கால்நடைகளை வளர்த்து வருகின்றார்கள். இந்நிலையில் குறித்த மேச்சல்தரைப் பகுதியை பகுதி பகுதியாகப் பிரித்து மகாவில் அபிவிருத்தி எனக்கூறி பெரும்பான்மை சிங்கள மக்களைக் குடியேற்றி அப்பகுதியில் சேனைப் பயிற் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் கால்நடை வளர்ப்பாளர்களுக்கும், சேனைப் பயிர்ச் செய்கையாளர்களுக்குமிடையில் மிகுந்த முறுகல் நிலை ஏற்பட்டு வருவது தொடர்ந்த வண்ணமாக உள்ளது.

இது இவ்வாறு இருக்க கடந்த வெள்ளிக்கிழமை(24.02.2023) அன்று கால்நடைகள் சேனைப் பயிற்செய்கைக்குள் உட்புகுந்ததாகத் தெரிவித்து பெரும்பான்மை இனத்தவர்கள் கால்நடைகளுக்கு துப்பாக்கியால் சுட்டுள்ளதுடன், கூரிய ஆயுதங்களாலும் தாக்கியுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். இதன்போது தூப்பாக்கிச் சூட்டுக்குட்பட்டு மாடு ஒன்று பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதுடன் 5 மாடுகள் வெட்டுக் காயங்களுக்கு உட்பட்டுள்ளதாகவும் கால்நடை வளர்ப்பாளர்கள் மிகுந்த கவலை தெரிவிக்கின்றனர்.

சுட்டவிரோத கட்டுத்துப்பாக்கியை வைத்துக் கொண்டு எமது மேச்சல்தரப் பகுதியில் சட்டவிரோதமான முடிறியில் அத்துமீறி குடிமீறி சேனைப் பயிற் செய்கையில் ஈடுபட்டுவரும் பெரும்பான்மைச் சிங்கள மக்களே இவ்வாறு எமது கால்நடைகள் மீது துப்பாக்கியால் சுட்டும், கூரிய ஆயுதங்களால் தாக்கியும் வருகின்றார்கள். எமக்கும் துப்பாக்கியால் சுடுவார்கள் என அச்சமாகவுள்ளது. இப்பகுதியில் வாழ்வதற்கு மிகுந்த உயிர் அச்சுறுத்தலாகவும் உள்ளது. எமக்கு பொலிஸ் பாதுகாப்பும் தேவையாகவுள்ளது. எனகால்நடை வளர்ப்பாளர்கள் அங்கலாய்க்கின்றனர்.

## கிழக்கு மாகாண ஆளுநர் அக்கரைப்பற்றுக்கு திடீர் விஜயம்





(நூருள் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் அக்கரைப்பற்று பிரதேச வைத்தியசாலைக்கு திடீர் விஜயமொன்றை இன்று (24) மேற்கொண்டிருந்தார். குறித்த விஜயத்தின் போது அக்கரைப்பற்று பிரதேச வைத்தியசாலையின் செயற்பாடுகளை கண்காணித்ததுடன் குறித்த வைத்தியசாலையில் அமையப்பெறவுள்ள புனர்வாழ்வு மையம் தொடர்பிலும் விரிவான கலந்துரையாடலை மேற்கொண்டார்.

குறித்த கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் அவர்களின் பிரதிநிதியாக பிரதிப்பணிப்பாளர் டாக்டர் எம்.பீ.ஏ வாஜித் அவர்கள் பங்கு கொண்டதுடன் குறித்த வைத்தியசாலையின் செயற்பாடுகள் மற்றும் அவசியம் தேவையான வளங்கள் பற்றியும் தெளிவுபடுத்தினார்.

குறித்த நிகழ்வின் போது அக்கரைப்பற்று பிரதேச வைத்தியசாலை மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் கௌரவ ஆளுநர் அவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்த விதம் என்பவற்றில் கௌரவ ஆளுநர் திருப்தி அடைந்து அதிதிகளுக்கான வரவுப்பதிவேட்டில் புறக் குறிப்பிட்டு வாழ்த்திச் சென்றமையும் விசேட அம்சமாகும்.

## சஜித் பகிர்வது மக்களுக்காகவே அன்றி, குடும்பத்திற்காக அல்ல



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு 'பகிர்ந்தளிக்க மட்டுமே' தெரியுமென இந்நாட்டில் ஒரு குறிப்பிட்ட சிலரே நாடு முழுவதும் கூறிக் கூறித் திரிவதாகவும், சஜித் பிரேமதாஸ நாட்டின் 220 இலட்சம் மக்களுக்காக பகிர்ந்தளிக்கிறாரே தவிர தனது நண்பர்களுக்கோ அல்லது குடும்பத்தாருக்கோ அல்ல என்பதை அவர்களுக்குச் சொல்ல வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ (24) வெலிஓயாவில் தெரிவித்தார்.

மக்களுக்காக எதுவும் செய்யாது தம்பட்டம் அடிப்பவர்கள் எதையுமே செய்ய நினைப்பதில்லை எனவும், பொய்யான பாசாங்குளைப் பேசி மக்களை ஏமாற்றி வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தேர்தல் காலத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் பேருந்துகளில் தங்கள் கட்சியின் பெயரையும் சின்னத்தையும் ஸ்டிக்கர்களாக ஒட்டி தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்திக் கொண்டாலும், 42 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு பேருந்தையேனும் வழங்க அவர்களால் முடியவில்லை எனவும், ஆனாலும், பாடசாலை மாணவர்களுக்கு தான் பேருந்து வழங்கும்போது, 'பஸ் மேன்' என்று தன்னை விமர்சிப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், எத்தகைய விமர்சனங்களை முன்வைத்தாலும் மக்களுக்கான சேவை நிறுத்தப்படாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கல்குவாரி குட்டையினுள்: மூழ்கி சம்மாந்துறை சிறுவன் பலி!



சம்மாந்துறை சென்னல் கிராமம் 1 சேவையாளர் பிரிவில் உள்ள கல்குவாரி குட்டை பகுதியில் குளிக்க சென்ற 12 வயது சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்வமொன்று இடம்பெற்றுள்ளது. (26) மாலை 5மணியளவில் குறித்த மரணம் சம்பவித்துள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

மூன்று சிறுவர்கள் சம்பவ இடமான கல்குவாரி பகுதியில் நீர் காணப்பட்டதால் குளிப்பதற்காக தயாராகியுள்ளனர். மரணமான சிறுவன் மற்ற இரு நண்பர்களையும் குளிப்பதற்காக அழைத்துள்ளார். அவர்கள் முடியாது என்று கூற அச் சிறுவன் முதலில் ஓர் உயரமான மலையில் ஏறி குறித்த பகுதியில் பாய்ந்துள்ளார். குட்டையின் ஆழத்தினை அறியாமல் பாய்ந்த அச் சிறுவன் காணவில்லை என இருந்த இரு சிறுவர்களும் சத்தம் போட்டு கூச்சளிட்டதாக இரு சிறுவர்களும் பொலிஸாரிடம் வாக்கு மூலம் வழங்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மரணித்த சிறுவனின் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு (27) உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் உள்ள இந்த கல்குவாரி குட்டை சுமார் 20 வருடங்களாக உபயோகிக்கப்படாமல் காணப்படுவதாகவும் சுமார் கிட்டத்தட்ட 30 அடி ஆழமாக உள்ளதாகவும் அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வாழும்போதே வாழ்த்துவோம் கலாவிபூஷணம் விருது வழங்கும் நிகழ்வு







(வாஸ் கூஞ்ஞ)

'வாழும்போதே வாழ்த்துவோம்' என்ற கொள்கைக்கு ஏற்ப சங்கவி பிலிம்ஸ் மற்றும் சங்கவி தியேட்டர் பிரைவேட் லிமிட்டட் தலைவர் கலாநிதி துரைராசா சுரேஸ் அவர்களின் ஏற்பாட்டில் 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய கலாவிபூஷணம் உலகத் தமிழர் விருது வழங்கும் விழா இடம்பெற்றது.

நான்காவது வருடமாக நடைபெற்ற இவ் வருடத்துக்கான (2023) இவ் விழாவானது சனிக்கிழமை (25.02.2023) மன்னார் பேசாலை சங்கவி திரையரங்கின் மண்டபத்தில் காலை 11 மணி முதல் நடைபெற்றது.

இவ்விழாவுக்கு மன்னார் பிரடிஐகள் குழுவின் தலைவரும் மன்னார் மறைமாவட்டத்தின் பேசாலை பங்கின் பங்குத் தந்தையுமான அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் இவருடன் தினகரன் பிரதம ஆசிரியர் ரி.செந்தில் வேலவர் , இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோகசர் புரவல்லர் காசீம் உமர் ஆகியோர் பிரதம அதிதியாக கலந்து கொண்டனர்.

இவர்களுடன் சிறப்பு விருந்தினர்களாக பலரும் இதில் பங்கேற்று இருந்தனர்..

அகில இலங்கை ரீதியாக 25 மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்கள் ஊடகவியலாளர்கள் 132 கலைஞர்கள் கலாவிபூஷணம் தமிழர் விருது. பெற்றிருந்தனர்.

இவ்விழாவின்போது மன்னார் மாவட்டத்தில் கலையில் சிறந்து விளங்கும் பகுதிகளில் ஒன்றான பேசாலை கலைஞர்களால் மேடையேற்றப்பட்ட மாதோட்ட பாங்கிலான தாவீது நாட்டுக்கூத்தும் மற்றும் பரத நாட்டியங்களும் இடம்பெற்றது.

## கோழுந்து பறித்தலில் முதலிடம்





(தலவாக்கலை பி.கேதீஸ்)

ஹேலிஸ் பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களில், பெண் தொழிலாளர்களுக்கிடையிலான சிறந்த கொழுந்து பறிப்பாளரை தெரிவு செய்யும் இறுதி போட்டி (25) சமர்செட் தோட்ட தேயிலை மலையில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் 44 பெண் தொழிலாளர்கள்பங்கேற்றிருந்தனர். கொழுந்து பறிக்க 20 நிமிடங்கள் வழங்கப்பட்டன. இப்போட்டியில் சிறந்த கொழுந்து பறிப்பாளராக தலவாக்கலை பெருந்தோட்ட நிறுவனத்தின் சமர்செட் தோட்டத்தைச் சேர்ந்த ஆர்.சீதையம்மா தெரிவுசெய்யப்பட்டார். 20 நிமிடங்களுக்குள் இவர் பத்து கிலோ 450 கிராம் தேயிலை கொழுந்து பறிந்திருந்தார். இவருக்கு மூன்று லட்சம் ரூபா காசோலையும் தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டது. வெற்றிபெற்ற சமர்செட் தோட்டத்தைச்சேர்ந்த 37 வயதான ஆர்.சீதையம்மா மூன்று பிள்ளைகளின் தாயாவார். இவர் தேயிலைத் தோட்டத் தொழிலில் 7 வருடங்களாக வேலை செய்து வருகின்றார். தேயிலை தொழிலில் ஈடுபட்டுள்ள தோட்ட தொழிலாளர்களை ஊக்குவித்து அவர்களை தேயிலை தொழிலில் ஈடுபட வைக்கும் நோக்கில் வருடாந்தம் இவ்வாறான போட்டிகள் நடத்தப்படுவதாக பெருந்தோட்ட கம்பனியின் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் ரொஷான் ராஜதுரை தெரிவித்தார். இப்பரிசளிப்பு நிகழ்வுகள் நானுஓயா ரதெல்ல விளையாட்டு அரங்கில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com
+94 777 164 524

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25579 | கு | 1975**
பருத்தித்துறை |இந்து
Teacher|இலங்கை|செவ் : 2
உத்திரட்டாதி (மீனம்)
173 செ.மீ | சைவம்

**25481 | வே | 1976**
சுதுமலை |இந்து
Consultant Respiratory
Physician |UK
ரேவதி (மீனம்) | 168 செ.மீ

**25506 | வே | 1978**
புலோலி | இந்து
Staf | Finland
ரேவதி (மீனம்)
168 செ.மீ

**25516 | வே | 1979**
மட்டக்களப்பு | இந்து
Doctor | இலங்கை
திருவோணம் (மகரம்)
170 செ.மீ

**25483 | வே | 1979**
கரம்பொன் |இந்து
Engineer | US
பூசம் (கடகம்)
179 செ.மீ

**25559 | வே | 1981**
பருத்தித்துறை | இந்து
Chef | Malta
பூரம் (சிம்மம்)
181 செ.மீ

**25536 | கு | 1983**
முல்லைதீவு |இந்து
Driver | கட்டார்
திருவோணம் (மகரம்)
173 செ.மீ | சூ.செவ் : 12

**25494 |வே |1985**
மானிப்பாய் | இந்து
Store Manager |இலங்கை
கேட்டை (விருச்சிகம்)
164 செ.மீ

**25502 | வே | 1985**
தாவடி | இந்து
Sales Rep | இலங்கை
ரோகிணி (இடபம்)
168 செ.மீ

**25498 | வே | 1985**
சுண்டிக்குளி | கிறிஸ்தவம்
Own Business |இலங்கை
ரோகிணி (இடபம்)
179 செ.மீ

**25518 | வே | 1986**
மானிப்பாய் |இந்து
Chef | பிரான்ஸ்
ஆயில்யம் (கடகம்)
.. செ.மீ

**25545 | கு | 1987**
அம்பாறை | இந்து
Senior QS | இலங்கை
மகம் (சிம்மம்)
162 செ.மீ | செவ் : 4

**25519 | வே | 1987**
காரைநகர் | இந்து
Drafting Manager| Australia
ரோகிணி (இடபம்)
175 செ.மீ | சூ.செவ் : 9

**25504 | வே | 1987**
தாவடி | இந்து
Sales Manager | இலங்கை
உத்திராடம் (மகரம்)
182 செ.மீ | சூ.செவ் : 12

**25503 | வே | 1987**
காரைநகர் |இந்து
Accountant | இலங்கை
அஸ்வினி (மேடம்)
183 செ.மீ | செவ் : 8

**25578 | வே | 1987**
வவுனியா |இந்து
Stastion Master | இலங்கை
அத்தம் (கன்னி)
160 செ.மீ | செவ் : 2

**25582 | வே| 1988**
திருகோணமலை |இந்து
Admin
இலங்கை
181 செ.மீ

**25497 | வே | 1988**
அல்லைப்பிட்டி |இந்து
Floor Manager | Australia
திருவாதிரை (மிதுனம்)
168 செ.மீ | செவ் : 1

**25547 | வே | 1989**
கிளிநொச்சி| இந்து
Staff | Australia
மூலம் (தனுசு)
173 செ.மீ | சூ.செவ் : 10

**25532 | வே | 1989**
கல்லடி | இந்து
Network Engineer | UK
உத்தரம் (சிம்மம்)
175 செ.மீ | சூ.செவ் : 12

**25529 | கு | 1989**
மன்னார் | கிறிஸ்தவம்
Management Serivce
Officer | இலங்கை
170 செ.மீ

**25555 | வே | 1990**
அல்வாய் |இந்து
Public Mgmt Assistant
ரோகிணி (இடபம்) |இலங்கை
176 செ.மீ

**25512 | வே | 1990**
கரவெட்டி | இந்து
Senior Executive |இலங்கை
அவிட்டம் (மகரம்)
176 செ.மீ

**25543 | வே | 1991**
நல்லூர் | இந்து | சைவம்
Director| இலங்கை
பூராடம் (தனுசு)
155 செ.மீ | சூ.செவ் : 12

**25491 | வி | 1991**
அம்பாறை |இந்து
Pawning Office Incharge
பூராடம் (தனுசு) | இலங்கை
176 செ.மீ

**25530 | வே | 1991**
பருத்தித்துறை |இந்து
Mortgage Manager
அஸ்வினி (மேடம்) | கனடா
167 செ.மீ

**25537 | வே | 1991**
பருத்தித்துறை |இந்து
Doctor | இலங்கை
புனர்பூசம் (மிதுனம்)
176 செ.மீ | செவ் : 4

**25542 | வே | 1991**
புத்தூர் | இந்து
Staff | UK
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | சூ.செவ் : 5

**25488 | வே | 1992**
அளவெட்டி| இந்து
QS | கட்டார்
கேட்டை (விருச்சிகம்)
183 செ.மீ

**25568 | சா | 1992**
மிருசுவில் |இந்து
Civil Engineer | சிங்கப்பூர்
ஆயில்யம் (கடகம்)
174 செ.மீ | செவ் : 2

**25489 | வே | 1993**
கோப்பாய் |இந்து
Lecturer | இலங்கை
சித்திரை (கன்னி)
183 செ.மீ | செவ் : 2

**25511 | வி | 1993**
கொக்குவில் |இந்து
Software Engineer
சதயம் (கும்பம்) | சிங்கப்பூர்
169 செ.மீ

**25554 | வே | 1994**
யாழ் நகர் | இந்து
Engineer | Australia
மிருகசீரிடம் (மிதுனம்)
183 செ.மீ

**25586 | கோ | 1994**
சண்டிலிப்பாய்| இந்து
Hotel | கனடா
ரோகிணி (இடபம்)
176 செ.மீ

**25528 | வே | 1995**
பருத்தித்துறை |இந்து
IT | இலங்கை
மகம் (சிம்மம்)
173 செ.மீ | செவ் : 12

**25563 | வே | 1995**
பருத்தித்துறை |இந்து
Teacher | இலங்கை
மகம் (சிம்மம்)
161 செ.மீ | செவ் : 1

**25567 | வே | 1995**
காரைநகர் | இந்து
Ass. Quality Manager
அஸ்வினி (மேடம்)
175 செ.மீ |இலங்கை

**25490 | வே | 1995**
காரைநகர் | இந்து
Production Manager | Italy
பூரட்டாதி (கும்பம்)
192 செ.மீ | செவ் : 2

**25605 |வே+ந| 1997**
கொடிகாமம் | இந்து
Staff | கட்டார்
அவிட்டம் (கும்பம்)
170 செ.மீ

**25593 | கு | 1999**
குரும்பசிட்டி | Non RC
Trainning | இலங்கை
திருவோணம் (மகரம்)
155 செ.மீ

அருந்ததி பிரைவட் லிமிடட்
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# அரசாங்கம் மக்களுடைய ஜனநாயகத்தையும், உரிமைகளையும் திட்டமிட்டு புறக்கணிக்கிறார்கள்

(ஹஸ்பர்)

ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் அடிப்டையில் பார்க்கின்ற போது நாட்டில் என்ன நடைபெறுகின்றது என்ற சந்தேகம் உருவாகிறது. ஜனாதிபதி அவர்கள் மார்ச்-9 தேர்தல் நடைபெறாது என்பதாக சொல்கிறார். இதற்கு முன் தேர்தல் ஆணைக்குழுவால் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டு திகதிகளும் அறிவிக்கப்பட்டிருந்தது. இவற்றை பார்க்கின்ற போது அர



சாங்கம் திட்டமிட்டு மக்களுடைய ஜனநாயகத்தையும், உரிமைகளையும் புறக்கணிப்பதாக வியாழக்கிழமை (23) பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், நிதி போதாத காரணத்தினால் தேர்தலை நடாத்த முடியவில்லை என அரசாங்கம் தெரிவிக்கின்றது. நாங்கள் வரலாறுகளை பார்க்கின்ற போது கடந்த காலங்களில் தேர்தல்கள் கடன் அடிப்படையில் தான் இதுவரை காலமும் நடைபெற்றிருக்கின்றது என்பது தெளிவான விடயமாகும். தேர்தல் நடவடிக்கை செலவுகள், அச்சு செலவுகள், பொலிஸ் செலவுகள் கடன் அடிப்படையிலேயே நடைபெற்று தேர்தலுக்கு பின்னே அரசாங்கம் செலுத்தும் நடவடிக்கைகளையே நாங்கள் பார்த்திருக்கின்றோம் எனவும் சென்ற வரவு செலவுத் திட்டத்தில் கூட தேர்தலுக்கு 10 பில்லியன் ஒதுக்கப்பட்டதாக சொல்லிவிட்டு தற்போது நிதியில்லை என்று சொல்வது பிழையான கருத்தாக காணப்படுவதாக அவரது பாராளுமன்ற உரையில் தெரிவித்திருந்தார்.

# கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் 16 ஆவது நிறைவாண்டு விழா







(இக்பால் அலி)

கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் 16 ஆவது நிறைவாண்டு விழா கண்டி ஏல்ஸ் ரீஜன்ஸ் நட்சத்திர ஹோட்டலில் தலைவர் ஆர். அன்பழகன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக இலங்கை ஹட்டன் வங்கியின் உதவி பொது முகாமையாளர் கைலைவாசன் இந்திரவாசன், கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வேலுக்குமார், கண்டி இந்திய உதவித் தூதரக 2 ஆம் செயலாளர் ஸ்ரீ பி. சோமராஜ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டதுடன் கௌரவ விருந்தினர்களாக கொழும்பு லக்;மி இம்பெக்ஸ் உரிமையாளர் பி. மகேஸ்வரன் மற்றும் ஜீவமால் ஜயவர்த்தன அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் சமூக தீபம் விருது பி. பழனியப்பன், தொழில் முனைவர் விருது எம். ஸ்ரீகாந்தன் , தொழில முனைவர் விருது தேசமான்ய ரவீ ரவீந்திரன், வாழ்நாள் சாதனையாளர் விருது ஏ. தட்சணாமூர்த்தி ஆகியோர்களுக்கு விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் செயலாளர் எஸ். பரமேஸ்வரன், பொருளாளர் சிங்கள, முஸ்லிம், தமிழ் வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# மாபெரும் இரத்ததான நிகழ்வு





(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி மிலேனியம் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டிலும் அஞ்சனா வைத்தியசாலை களுவாஞ்சிகுடி அனுசரணையிலும் மனிதனின் உயிர் அரியது அதனை காக்கும் இரத்தம் பெரியதுஎனும் கருப்பொருளில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் மாபெரும் இரத்ததான முகாம் ஞாயிற்றுக்கிழமை (26.02.2023) இடம் பெற்றது.

களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி க.புவனேந்திரநாதன் அவர்களின் பூரண வழிகாட்டலின் கீழ் வைத்தியர்கள், தாதிய பரிபாலகிகள், தாதிய உத்தியோகஸ்தர்கள், பொது சுகாதாரகள உத்தியோகஸ்தர்கள் மற்றும் சிற்றூழியர்களின் ஒத்துழைப்பின் கீழ் மாபெரும் இரத்ததான முகாம் வெற்றிகரமாக இடம்பெற்றது. இதன்போது நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

# குமுக்கன் ஆற்றங்கரை மஹாகாளிதேவி சந்நிதியில் மாபெரும் சண்டி ஹோமம்!







( குமுக்கனிலிருந்து வேதசகா)

கிழக்கின் தென்கோடியில் உள்ள குமுக்கன் ஆற்றங்கரையில் சித்தர்களுக்கே காவல் சக்தியாக விளங்குகின்ற அன்னை மஹாகாளி தேவி சன்னிதியில், இந்த பூமிக்கே அதீத சக்திகளை உயிரூட்டும் அற்புதமான மாபெரும் சண்டி ஹோமம் (26) ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜியின் முன்னிலையில் இடம்பெற்ற இம் மாபெரும் நான்காவது சண்டி ஹோமத்தின் வேள்வி கிரியைகளை, இலங்கையின் இலங்கை பிரபல இணுவில் தர்ம சாஸ்தா குருகுல வேத வாத்தியார் சிவஸ்ரீ வத்சாங்க குருக்கள் தலைமையிலான நயினை நாகபூஷணி அம்மன் ஆதீன குருக்கள் வாமதேவ கைலாஸபானு குருக்கள் உள்ளிட்ட 10 சிவாச்சாரியார்கள் எட்டு மணி நேரம் சிறப்பாக நடாத்தினார்கள்.

இவர்கள்அனைவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்தவர்கள்.

ஹோமத்துக்கான திரவியங்கள் அனைத்தும் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டிருந்தன. அடர்ந்த கானகத்தின் மத்தியில் அமைந்துள்ள குமுக்கன் ஆற்றங்கரை மஹாகாளி தேவி சந்நிதியில், சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி சங்கல்பத்தில் இருந்து யாகத்தில் பங்கேற்றார்.

யாகத்தில் சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன் ,உப தலைவர் மனோகரன், நமசிவாய மகேஸ்வரன் சுவாமி, ஸ்ரீ தியாகராஜா , ஸ்ரீ சகாதேவராஜா , ஸ்ரீ லதன் உள்ளிட்ட பல பிரமுகர்கள் பங்கேற்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை சபையின் திருமலை பிராந்திய பிரதம பொறியியலாளர் எந்திரி.தெய்வநாயகம் சுரேந்திரகுமார்( காரைதீவு) குடும்பத்தினரும் யாகத்தில் பங்கேற்றனர்.

(26) ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு மாபெரும் சண்டி ஹோமம் ஆரம்பமாகியது.

தொடர்ந்து இந்த பிரபஞ்சத்தில் ஆதாரமாக இருக்கும் 13 சக்திகளுக்கும் யாகத்தில் சிறப்பு பூஜைகள், 64 உபசாரங்கள் இடம் பெற்று

பிற்பகல் 4 மணிக்கு பூர்ணாகுதி இடம் பெறுதலுடன் ஹோமம் நிறைவுக்குவந்தது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி சகல சித்தர்களுக்கும் செந்நிற வேஷ்டிகளை வஸ்திரதானம் வழங்கி வைத்தார்.

குமண பறவைகள் சரணாலய வனத்துறை அதிகாரி பி.சமரநாயக்க பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். ஊடகத்துறை சித்தர் வி.ரி.சகாதேவராஜா வெட்டிவேர் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

யாகத்தில் சித்தர்கள் குரல் அமைப்பின் உறுப்பினர்களான கிஷானன்,ரூபன்,டிரோன் ,அருள் , மதுஸ்,அருண்,பிரதீஸ் , ஷாகர்,பிராஜானந்த் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# நாவிதன்வேளி பகுதியில் பெரும்போக நெல் கோள்வனவு செய்யப்படும் வேலைதிட்டம் முன்னேடுப்பு



(பாறுக் ஷிஹான்)

2022/2023ம் ஆண்டிற்கான பெரும் போகத்தில் நெல் அறுவடைக்கான நியாயமான விலையை விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுத்தல், மிகை அறுவடையினை அரசாங்கம் கொள்முதல் செய்தல், இக்கட்டான பொருளாதார நிலைமையினால் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல் ஆகிய நோக்கங்களினை அடிப்படையாகக் கொண்டு 2022/2023ம் ஆண்டிற்கான பெரும் போக நெல் கொள்வனவு வேலைத் திட்டம் அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் தீர்மானத்திற்கமைய நாடு பூராகவும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கமைய நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட அரிசி ஆலைகளில் நெல் கொள்வனவுகளை மேற்கொள்ளும் செயற்திட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தலைமையில் மத்தியமுகாம் பகுதியில் இன்று இடம்பெற்றது

இந் நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீஸன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட விவசாய பணிப்பாளர் எம்.எஸ்.ஏ கலீஸ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் நளீர் அபூபக்கர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மன்னார் நகர் பகுதிக்குள் 41 கிலோ கேரளா கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து மன்னார் நகர் பகுதியில் கேரளா கஞ்சா பொதிகள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.. இது தொடர்பாக சந்தேக நபர் ஒருவரும் இவ்போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டள்ளார்.

மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொ.கொ 83790 விபுர்த்தி உத்தியோகத்தருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து மன்னார் பொலிசார் மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்னார் நகர் பகுதிக்குள் தலைமன்னார் பிரதான வீதியின் ஆடை தொழிற்ச்சாலையின் பின் பகுதியில் உள்ள களப்பு பிரதேசத்தை சற்றி வளைத்து தேடுதலில் ஈடுபட்டபோதே 41 கிலோ 620 கிராம் கேரளா கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.



இவ்போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்சந்தேக நபர் கருங்கண்டல் வண்ணாகுளம் பகுதியை சேர்ந்த 25 வயதுடையவர் என பொலிசார் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட பதில் கடமை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத் விதானகேவின் பணிப்பின் பேரில் மன்னார் மாவட்ட குற்றதடுப்பு பொறுப்பதிகாரி பொ.ப.ரத்நாயக பொ.சா.36501 ரத்னமணல தலைமையிலான அணியினரே மேற்படி கேரள கஞ்சா மற்றும் சந்தேக நபரையும் கைது செய்ததும் குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சா என்பன மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதவான் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**25607 | வே | 1974**
கரனைவாய் |இந்து
இலங்கை
அஸ்வினி (மேடம்)
164 செ.மீ

**25499 | வே | 1982**
சுண்டிக்குளி | கிறிஸ்தவம்
Web Analytics | இலங்கை
விசாகம் (விருச்சிகம்
164 செ.மீ

**25546 | வே | 1982**
பருத்தித்துறை | இந்து
Inspector | இலங்கை
உத்திராடம் (மகரம்)
155 செ.மீ | Divorced

**25572 | வே | 1983**
சிறுபிட்டி | இந்து
Teacher | இலங்கை
மூலம் (தனுசு)
152 செ.மீ | செவ் : 7

**25538 | வே | 1984**
காரைநகர் | இந்து |செவ் :4
Development Officer |SL
மிருகசீருடம் (மிதுனம்)
154 செ.மீ | Divorced

**25531 | வ | 1986**
மாவிட்டபுரம் | இந்து
Administrative Officer
அத்தம் (கன்னி) | இலங்கை
149 செ.மீ | செவ் : 2

**25469 | வே | 1988**
வண்ணார்பண்ணை |இந்து
Doctor | UK
பூரம் (சிம்மம்)
173 செ.மீ

**25614 | ப |1989**
திருகோணமலை | இந்து
இலங்கை
சுவாதி (துலாம்) | செவ் : 1
158 செ.மீ

**25589 | வே | 1989**
நல்லூர் | இந்து
Computer Typing
மகம் (சிம்மம்) |இலங்கை
153 செ.மீ | Divorced

**25613 | வே | 1989**
திருகோணமலை | இந்து
Tailor |இலங்கை
பூரட்டாதி (கும்பம்)
161 செ.மீ

**25585 | ப | 1989**
தெல்லிப்பளை |இந்து
Beautician | இலங்கை
புனர்பூசம் (மிதுனம்)
161 செ.மீ c செவ் : 1

**25611 | ப | 1989**
பருத்தித்துறை | இந்து
Gram Niladhari | இலங்கை
மூலம் (தனுசு)
164 செ.மீ | செவ் : 7

**25610 | கோ | 1991**
சுன்னாகம் | Non RC
Software Engineer
இலங்கை
156 செ.மீ

**25590 | வே | 1991**
திருகோணமலை | இந்து
Engineering Coordinator
பூரட்டாதி (கும்பம்)|சூ.செவ் :12
161 செ.மீ | சைவம்

**25520 | சா | 1992**
கொடிகாமம் |இந்து
கனடா
பூரம் (சிம்மம்)
169 செ.மீ

**25496 | வே | 1992**
வரணி |இந்து
Teacher(Graduate)|இலங்கை
திருவாதிரை (மிதுனும்)
165 செ.மீ | செவ் : 12

**25556 | வி | 1993**
அழியாளை |இந்து
Accountant | இலங்கை
ரோகிணி (இடபம்)
160 செ.மீ

**25591 | கு | 1993**
பருத்தித்துறை |இந்து
Development Officer
அத்தம் (கன்னி) | இலங்கை
170 செ.மீ | செவ் : 7

**25580 | ந | 1993**
சாவகச்சேரி | இந்து
Business | இலங்கை
அத்தம் (கன்னி)
160 செ.மீ | செவ் : 1

**25566 | ந | 1993**
யாழ் நகர் | இந்து
Teacher | இலங்கை
பூசம் (கடகம்)
155 செ.மீ | செவ் :2

**25574 | கோ | 1994**
கொடிகாமம் | இந்து
Development Officer
கார்த்திகை (இடபம்)|செவ் :12
160 செ.மீ |இலங்கை

**25569 | வே | 1994**
யாழ் நகர் |இந்து
Senior Software Engimneer
பூரட்டாதி (கும்பம்) |இலங்கை
172 செ.மீ

**25604 | ப | 1994**
கொடிகாமம் | இந்து
Ass. Lecturer |இலங்கை
சதயம் (கும்பம்)
167 செ.மீ | செவ் : 2

**25521 | வே | 1994**
புங்குடுதீவு | இந்து
Account Assistant
பூசம் (கடகம்) | இலங்கை
150 செ.மீ

**25540 | வி | 1994**
யாழ் நகர் |இந்து
மூலம் (தனுசு)
இலங்கை
155 செ.மீ

**25539 | வே | 1994**
புலோலி |இந்து
Office Admin | இலங்கை
மூலம் (தனுசு)
165 செ.மீ | செவ் : 2

**25467 | ந | 1994**
யாழ்ப்பாணம் | கிறிஸ்தவம்
Medical Company
பூராடம் (தனுசு)
152 செ.மீ | இலங்கை

**25570 | கோ | 1994**
மாதகல் | இந்து
Beautician | இலங்கை
அஸ்வினி (மேடம்)
162 செ.மீ | செவ் : 1

**25525 | வே | 1995**
கொக்குவில் | இந்து
இலங்கை
பூரம் (சிம்மம்)
160 செ.மீ | செவ் : 4

**25565 | கு | 1995**
திருகோணமலை |இந்து
Officer | இலங்கை
பூரட்டாதி (கும்பம்)
160 செ.மீ | செவ் : 1

**25584 | வே | 1995**
திருகோணமலை |இந்து
Accountant | இலங்கை
உத்தரம் (கன்னி)
155 செ.மீ | செவ் : 7

**25515 | வே | 1996**
காரைநகர் |இந்து
Associative Software Eng.
சதயம் (கும்பம்) |இலங்கை
158 செ.மீ | சூ.செவ் : 10

**25464|வே+கோ|1996**
நீர்வேலி | இந்து
இலங்கை
திருவோணம் (மகரம்)
173 செ.மீ

**25596 | வே | 1997**
காரைநகர் | இந்து
இலங்கை
மூலம் (தனுசு)
153 செ.மீ | செவ் :12

**25501 | வே | 1997**
வவுனியா |இந்து
Student | இலங்கை
சதயம் (கும்பம்)
173 செ.மீ

**25480 | வே | 1997**
நவாலி |இந்து
Laboratory Technician | UK
திருவோணம் (மகரம்)
152 செ.மீ | செவ் : 1

**25544 | சா | 1999**
மிருசுவில் | இந்து
Nurse |இலங்கை
மிருகசீரிடம் (இடபம்)
155 செ.மீ | சைவம்

**25550 | கோ | 2000**
கொடிகாமம் | இந்து
இலங்கை
பூராடம் (தனுசு)
148 செ.மீ | சூ.செவ் : 3

**25561 | சா | 2001**
மிருசுவில் | இந்து
இலங்கை
உத்திரட்டாதி (மீனம்)
154 செ.மீ

**25552 |வே+ந| 2002**
புங்குடுதீவு | இந்து
இலங்கை
மஜருகசீரிடம் (இடபம்)
155 செ.மீ

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# கிழக்கு ஆளுநர் மட்டக்களப்பு சாய்பாபா வைத்தியசாலைக்கு விஜயம்





(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அவர்கள், ஸ்ரீ சத்தியசாயி கருனை நிலையம் அறக்கட்டளையின் கீழ் இந்தியாவில் இயங்கிவரும் மட்டக்களப்பில் உள்ள ஸ்ரீ சத்தியசாயி சஞ்சீவனி வைத்தியசாலையில் கண்காணிப்புச் சுற்றுப்பயணத்திற்காக அண்மையில் விஜயம் மேற் கொண்டார்.

இந்தியாவின் சண்டகுரு ஸ்ரீ மதுசூதன் சாய் மற்றும் அவரது சீடர்கள் இதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் வழங்குகிறார்கள். இந்த மருத்துவமனை சிறு பிள்ளைகளுக்கு இருதய அறுவை சிகிச்சை உட்பட பல மதிப்புமிக்க பராமரிப்பு சேவைகளை வழங்கி வருகிறது.

மேலும், கிழக்கு மாகாணத்தில் தற்போது இல்லாத இருதய வடிகுழாய் சிகிச்சை பிரிவு (cath lab) அடுத்த மாதத்திற்குள் நிறுவப்பட உள்ளது. சத்யசாய் கருணை நிலையம் அறக்கட்டளை மூலம் நெதர்லாந்தில் இருந்து கொண்டு வரப்படும் என்கிறார் மருத்துவமனை டாக்டர் ரமேஷ் ராவ்.

தற்போது, இந்த அறக்கட்டளை இந்தியா, அமெரிக்கா மற்றும் நைஜீரியா உள்ளிட்ட பல நாடுகளில் இத்தகைய மருத்துவமனைகளை நிறுவியுள்ளது.

இதனை இலங்கை மருத்துவ சங்கம் அங்கீகரித்துள்ளது. கடந்த செப்டம்பரில் லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையால் பரிந்துரைக்கப்பட்ட 6 குழந்தைகளுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டு ஆபத்தான நிலையில் இருந்த நான்கு குழந்தைகள் இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அந்த அறுவை சிகிச்சைகள் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த சத்திரசிகிச்சைகளை செய்வதற்கு ஒவ்வொரு குழந்தைக்கும் சுமார் 25 இலட்சம் ரூபா செலவாகும் என வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், இதய வடிகுழாய் அலகு நிறுவப்பட்ட பின்னர், மேலும் இரண்டு அறுவை சிகிச்சை அரங்குகள் நிறுவப்பட உள்ளன. இதுதவிர, மருத்துவமனையைச் சுற்றியுள்ள தருமபுரம், கிரான் குளம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு வாரத்தில் மூன்று நாட்கள் இலவச உணவு வழங்கப்படுவதுடன், அப்பகுதி மக்களுக்கு இலவச மருந்து வழங்குவதற்காக வெளி நோயாளிகள் பிரிவும் செயல்பட்டு வருகிறது.

இதன்போது, வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பென்னி ஜயவர்தன, பிரதம வைத்திய அதிகாரி சிஷ்ரமிக்க பிரிகேடியர் ஏ.எஸ்.எம். பாரிஸ் உட்பட பலர் ககலந்து கொண்டனர்.



நேற்று கல்லடி செல்வா மண்டபத்தில் மட்டக்களப்பு மார்ச் 12 இயக்கத்தின் இணைப்பாளர் சபா.சிவயோகநாதன் தலைமையில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட உள்ள இளைஞர் யுவதிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளுக்குமான கலந்துரையாடலானது இன்று காலை 10 மணிதொடக்கம் பிப 3.30 மணிவரை நடைபெற்றது. இந் நிகழ்ச்சிக்கு பெ:.ரல் நிறுவனம் முழுமையான அனுசரணை வழங்கியது என்பது குறிப்பிடதக்கதாகும்.

# மொழியை நாம் மதிக்கவில்லையென்றால் அந்த மொழியை பேசுகின்றவர்களை நாம் மதிக்கவில்லை

## அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார்

(வாஸ் கூஞ்ஞ)

உன் தாய்மொழி மதிக்கப்படவில்லையென்றால் உன் குரல்கள் நெறிக்கப்படுகின்றது. மொழியை நாம் மதிக்கவில்லையென்றால் அந்த மொழியை பேசுகின்றவர்களை நாம் மதிக்கவில்லை என்றாகும். ஆகவே கலைஞர்களாகிய உங்கள் படைப்புக்கள் மேலும் தொடர வேண்டும் என பேசாலை பங்குத் தந்தையும் மன்னார் பிரஜைகள் குழுத் தலைவருமான அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

சங்கவி பிலிம்ஸ் மற்றும் சங்கவி தியேட்டர் பிரைவேட் லிமிட்டட் தலைவர் கலாநிதி துரைராசா சுரேஸ் அவர்களின் ஏற்பாட்டில் 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய கலாவிபூஷணம் உலகத் தமிழர் விருது வழங்கும் விழா சனிக்கிழமை (25) பேசாலையில் இடம்பெற்றபோது பேசாலை பங்குத் தந்தையும் மன்னார் பிரஜைகள் குழுத் தலைவருமான அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தொடர்ந்து தனது உரையில்

'தோன்றின் புகழோடு தோன்றுக. அன்றேல் தோன்றினும் தோன்றாமை நன்று' என வள்ளுவரின் வாக்குக்கு அமைவாக வாழ்வோரை வாழ்த்துகின்ற என்ற இந்த நிகழ்வை சங்கவி தியேட்டர் லிமிட்டட் நான்காவது தடவையாக நடாத்துவதில் மகிழ்ச்சி அடைவது மட்டுமல்ல இவ்விழாவின் தலைவர் திரு சுரேஸ் தமிழுக்கு செய்கின்ற சேவையையிட்டு நான் அவரை வாழ்த்தி நிற்கின்றேன்.

தமிழ்நாயகம் அடிகளார் தமிழை உலகிற்கு எடுத்துச் செல்லும்போது இவ்வாறு கூறுவார் என்னை படைத்தனன் தானே தமிழ் செய்யுமாறு. இந்த விருது வாக்குக்கு அமையவே அவர் உலகத்தில் தமிழ் தூதுவராக திகழ்ந்தார்.



இந்த தமிழை நினைக்கின்றபோது இதைப் பற்றிக் கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் துடிப்பு இருக்கின்றது. பற்றற்ற உலகம் சார்ந்த உணர்வுகளை ஒன்றுசேர்க்கின்ற மொழியை நாம் பற்றிக் கொள்ளுகின்றபோது இந்த உலகத்தின் அனைத்து பற்றுக்களும் எங்களைவிட்டு அகன்று போகின்றது.

இந்த வகையில் இங்கு விருதுகள் பெற வந்திருக்கும் களைஞர்கள் எழுத்தாளர்களுக்கு நான் இதை கூறிவைப்பதில் பெருமை அடைகின்றேன்.

உன் தாய்மொழி மதிக்கப்படவில்லையென்றால் உன் குரல்கள் நெறிக்கப்படுகின்றது. மொழியை நாம் மதிக்கவில்லையென்றால் அந்த மொழியை பேசுகின்றவர்களை நாம் மதிக்கவில்லை என்றாகும்.

ஆகவே எமக்கு மொழி ஓர் உயிர். ஆகவே மொழியை நாம் வளர்த்தெடுப்பது மிகவும் முக்கியமானதாகும். உலகத்தில் ஏழு அதிசயங்கள் உண்டு என்பார்கள். ஆனால் எனக்கு ஒரேயொரு அதிசயம் மட்டுமே அது தமிழ் மொழி மட்டுமே.

எமது மொழி ஒரு அழகான மொழி. இதை நீங்கள் புத்தகமாக கலையாக வடிவமைக்காவிடில் சரித்திரம் மௌனமாகிவிடும். இலக்கியம் ஊமையாகிவிடும்.

மன்னார் தமிழுக்குரிய பகுதி இந்த இடத்தில் இவ் விழாவை எடுப்பது சாலச் சிறந்தாக அமைகின்றது. மன்னார் விரும்பப்படுவதில்லை. ஆனால் மன்னாருக்கு யாராவது வந்தால் இவ்விடத்தை விட்டுச் செல்ல விரும்புவதில்லை.

திருக்குறலில் இரண்டு மரங்கள் மட்டுமே காணப்படுகின்றன. ஒன்று பனை மற்றையது மூங்கில். இந்த பனை மரங்கள் காட்சி அளிக்கும் இந்த இடத்தில் நான்காவது தேசிய கலாவிபூஷணம் உலக தமிழ் விருது வழங்கும் விழா நடப்பது சாலச் சிறந்ததாகும்.

வள்ளுவன் பனை மரத்தை சொல்லுவதின் மூலம் தமிழர்களின் கலாச்சாரத்தை எடுத்துக் கூறியுள்ளார். கலைஞர்களாகிய உங்கள் மூலம் தமிழ் வளர்ச்சி அடைய வேண்டும்.

இலக்கியத்தின் ஊடாக இந்த இனம் தொடர்ந்து வளர்ச்சி அடைய வேண்டும். செய்ய முடிந்தவன் சாதிக்கின்றான் செய்ய முடியாதவன் போதிக்கின்றான். என கூறுவார்கள்.

ஆகவே இந்த இடத்தில் நீங்கள் ஒரு சாதனையாளர்களாக இருக்கின்றீர்கள். உங்கள் படைப்புக்கள் இன்னும் அதிகமாக வளர வேண்டும். அப்பொழுது எமது இனம் வாழும். இனம் வாழ்ந்தால் மனிதம் வாழும். இந்த மனிதத்துக்குள்தான் இறைவனை நாம் காண முடியும்.

ஆகவே நீங்கள் தமிழுக்கு செய்கின்ற சேவை இறைவனுக்கு செய்கின்ற சேவை என வாழ்த்தி நிற்கின்றேன் என இவ்வாறு தெரிவித்தார்.

# கவிதாயினி மேகா மிர்சா எழுதிய புல் ஏந்தா பனித்துளிகள் கவிதை நூல் வெளியீடு!



(அபு அலா)

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் (நுஜா) ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை கவிதாயினி மேகா மிர்சா எழுதிய 'புல் ஏந்தா பனித்துளிகள்' கவிதை நூல் வெளியீட்டு விழா (26) அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச்சங்க கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் சிரேஸ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எச். அப்துல் றஹீம், அட்டாளைச் சேனை உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், பொத்துவில் மக்கள் வங்கிக் கிளையின் வியாபார திட்ட முகாமையாளர் எம்.ஐ.எம்.நபில், சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி முகாமையாளர் சிரேஸ்ட ஊடகவியலாளர் கலாநிதி ரியாத் ஏ. மஜித் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நூல் ஆய்வினை தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாவும், நூல் அறிமு



கத்தை பன்னூலாசிரியர் எஸ்.எல்.மன்சூர், நூல் நயத்தினை சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜுல்பிகா ஷெரிப் ஆகியோரினால் நிகழ்த்தப்பட்டது.

இவ்விழாவில் சட்டத்தரணிகள், வைத்தியர்கள், இலக்கியவாதிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு பிரதிகளை பெற்றுக் கொண்டனர்.

# காகங்கள் வீதியில் குளிக்கின்ற காட்சி; மக்கள் சிரமம்





(பாறுக் ஷிஹான்)

வீதியில் வெள்ள நீர் தேங்கி இருப்பதன் காரணமாக வாகன சாரதிகள் பாதசாரிகள் சிரமங்களை தொடர்ச்சியாக எதிர்கொண்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட அரச நிறுவனங்கள் தனியார் நிறுவனங்கள் அமைந்துள்ள யாட் வீதியில் தேங்கி கிடக்கின்ற வெள்ள நீர் காரணமாகவே இச்சிரமங்களுக்கு பொதுமக்கள் முகம் கொடுத்துள்ளனர்.

இவ்வீதியினுடாக அரச தனியார் உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள் அன்றாடம் தமது போக்குவரத்து பாதையாக பாவித்து வருகின்றனர்.

இவ்வாறு வெள்ள நீர் தொடர்ச்சியாக தேங்கி வடிந்தோடாமல் காணப்படுவதனால் மாற்று பாதையை நாடுவதை அவதானிக்க முடிகின்றது. இச்சந்தரப்பத்தை பயன்படுத்தி அதிகமான காகங்கள் குளிக்கின்ற இடமாக இப்பாதை மாறி வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

இது தவிர வெள்ள நீர் தேங்கியுள்ள வீதியினால் பயணம் செய்கின்ற வாகனங்கள் திடிரென பழுதடைந்து தரித்து நிற்பதையும் காண முடிகின்றது.

மேலும் இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முன்வர வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# அம்பாறை நடனத்துறை கலைஞர் ஐவருக்கு உலகத் தமிழர் விருது



(வி.ரி. சகாதேவராஜா)

தேசிய ரீதியில் கலைத்துறையில் சாதனை புரிந்து வரும் கலைஞர்களை கௌரவிக்கும் சங்கவி தியேட்டர் 04 வது முறையாக நடாத்திய நிகழ்வு மன்னார் பேசாலை சங்கவி திரையரங்கு மண்டபத்தில் 2023.02.25 ம் திகதி இடம்பெற்றது.

அதில், அம்பாறை மாவட்டத்தில் இருந்து நடனத்துறை கலைஞர்களாகிய ஜெ.தக்சாளினி லோ.சத்யாழினி, நா. விதுஷியா, பா.விமிலியா, கி.அக்ஷலா, த.அனுலக்சியா ஆகியோருக்கு உலகத் தமிழர் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது.

அருந்ததி இணைய திருமண சேவை

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில் Brides By Vasuki VASUKI BALASURIYAN அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி

COLOMBO 2023

அருந்ததியின் 7வது மாற்றுமோதிரம் மணப்பெண் அலங்கார நிகழ்வு 10.01.2023 அன்று ஹலதாரி ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரபல அழகுக்கலைநிபுணர் ரமனி பெர்னாண்டோ அவர்களின் மாணவியுமான Professional Bridal Dressing பாடநெறியில் டிப்ளோமா தகைமையும் பெற்ற அழகுக்கலைத்துறையில் 2 வருட அனுபவமும் கொண்ட Brides By Vasuki எனும் அழகுக்கலை நிறுவனத்தின் நிறுவனர் வாசுகி பாலசூரியன் அவர்களும் கலந்து கொண்டார். அவரின் மணப்பெண் அலங்காரம்








# மட்டு.சிவாநந்தா தேசிய பாடசாலை 2001ம் ஆண்டு உயர்தர பிரிவு மாணவர்களது ஒன்றுகூடல்!!




மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலையின் 1998 ஆண்டு சாதாரண தரம் மற்றும் 2001 ஆண்டு உயர்தரப் பிரிவு மாணவர்களது.

சிவாநந்தியன் சக பாடிகளின் வருடாந்த திட்ட இணைப்பாளர்களின் மூன்றாவது ஒன்று கூடல் நிகழ்வு மட்டக்களப்பில் நடைபெற்றது.

மூன்றாவது வருட ஒன்று கூடல் நிகழ்வினை தொடர்ந்து சமூகத்திற்கு சிறந்த திட்டம் அமுலாக்குனர்களாகச் செயற்பட்ட சகபாடிகளை பாராட்டி நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

ஒன்றுகூடல் நிகழ்வின் மூன்றாவது வருடத்தை சிறப்பிக்கும் வகையில் ஆசிரியர் கமலதாசஸ் கௌரவிக்கப்பட்டதோடு, சிவாநந்திய சக பாடிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சாக பாடி ஒருவருக்கான முச்சக்கர வண்டியும் வழங்கப்பட்டது.

நிகழ்வில் சிவாநந்தா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத் தலைவர் வி.வாசுதேவன், செயலாளர் சாய் ராஜன் மற்றும் சகபாடிகள் அமைப்பின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

சிவாநந்தா தேசிய பாடசாலையின் 2001ம் ஆண்டு உயர்தர பிரிவு சகபாடிகளினால் தொடர்ச்சியாக பல்வேறுபட்ட கல்வி மேம்பாட்டிற்கான உதவி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.





திருகோணமலை பெருந்தெரு விக்னேஸ்வர மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் இருநூறாவது ஆண்டை முன்னிட்டு அதிபர் தலைமையில் நேற்று ( 25 ) சனிக்கிழமை இரத்ததான முகாம் ஒன்று பாடசாலையில் நடைபெற்றது. இதில் திருமதி எம்.சேகரன் வலையக்கல்வி பணிமனையின் உதவிக் கல்வி பணிப்பாளர் அவர்களும் ,சிறப்பு விருந்தினராக திரு.H.A.S.K. ஜெய ரத்தின Head quarters inspector,Trincomalee அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

(படங்கள் - அ . அச்சுதன் )

# தாஜ் சமுத்ரா ரோட்டரி விழாவில் மட்டு. ரோட்டரி கழகத்திற்கு வின்னர் விருது



**( வி.ரி. சகாதேவராஜா)**

மட்டக்களப்பு ரோட்டரி கழக முன்னாள் தலைவரும் ஆளுநருமான அமரர் என். பத்மநாதன் ஞாபகார்த்த வின்னர் விருது மட்டக்களப்பு ரோட்டரி கழகத்திற்கு கிடைத்துள்ளது .

இந்த விருது வழங்கும் விழா கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றது .

கடந்த ஆண்டில் சிறந்த திட்டங்களை மேற்கொண்டமைக்காக முதல் வின்னர் வெற்றியாளர் விருது மட்டு ரோட்டரி கழகத்திற்கு கிடைத்தது. இவ் விருதை மட்டக்களப்பு ரோட்டரிக் கழகத் தலைவர் ரோட்டரியன் பு. ரமணன் பெற்றுக்கொண்டார்.

திருமதி மங்களேஸ்வரி பத்மநாதன் இவ் விருதுடன் 25 ஆயிரம் பணப்பரிசையும் வழங்கி வைத்தார் .

மட்டு .ரோட்டரி கழக தலைவர் ரமணன் இந்த 25 ஆயிரம் ரூபாய் பணப் பரிசை சர்வதேச ரோட்டரி நிதியத்திற்கு அந்த இடத்திலேயே அன்பளிப்பு செய்தார்.

மேலும் அமரர் பத்மநாதன் ஞாபகார்த்த போட்டியில் முதல் இடத்தை கண்டி ரோட்டரி கழகமும் இரண்டாவது இடத்தை கிளிநொச்சி ரோட்டரி கழகமும் பெற்றுக் கொண்டது . அவர்களுக்கு முறையை 15,000 ரூபாய் 10,000 ரூபாய் பணப்பரிசை திருமதி பத்மநாதன் வழங்கி வைத்தார்.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை மற்றும் மாலைதீவுகளை உள்ளடக்கிய ரொட்டரி கழகத்தின் ,மாவட்ட இலக்கம் 3220 ஏற்பாடு செய்த 32 ஆவது ரொட்டரி மாவட்ட மாநாட்டில் இது வழங்கி வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் அவ் விழாவில் கலந்து சிறப்பித்தார்.

போலியோ தடுப்புப் பிரச்சாரம், சுனாமி மற்றும் மருந்துத் தட்டுப்பாடு மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடி போன்றவற்றுக்கு காலத்தில் முகங்கொடுக்க நேரிட்டது. இந்த நெருக்கடிகளின் போது ரொட்டரி கழகம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவை ஜனாதிபதி பாராட்டினார்.

மாநாட்டின் தலைவரும் ரொட்டரி கழகத்தின் முன்னாள் தலைவருமான அனீஷா தர்மதாச, இலங்கை மற்றும் மாலைதீவுகளை உள்ளடக்கிய 3220 மாவட்டத்தின் ஆளுநர் புபுது செய்சா,மாவட்ட ஆலோசகரும் முன்னாள் தலைவருமான பிரதீப் அமிர்தநாயகம் ஆகியோர் இங்கு உரையாற்றினர்.

இந்நிகழ்வில் சர்வதேச ரொட்டரி தலைவர் திருமதி ஜெனிபர் ஜோன்ஸ் அவர்களின் பிரதிநிதியான திருமதி வலேரி வேஃபர், முன்னாள் மாவட்ட ஆளுநர்கள், முன்னாள் மாவட்ட தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# சுவிஸ் உதயம் அமைப்பினால் பாண்டிருப்பு நாவலர் வித்தியா மாணவர்களுக்கு உதவி




**(எஸ்.சபேசன்)**

கிழக்கு மாகாணத்தில் கல்விப் பணி மற்றும் வாழ்வாதார உதவிகளை முன்னெடுத்துவரும் சுவிஸ் உதயம் அமைப்பின் ஊடாக மாணவர்களுக்கான கற்றல் உபகரண மற்றும் புத்தகப்பை வழங்கும் நிகழ்வு 25 ஆம் திகதி சனிக்கிழமை கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் மிகவும் வறிய நிலையில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட 60 மாணவர்களுக்கு புத்தகப் பைகள் வழங்கப்பட்டன.

பாடசாலையின் அதிபர் கே.தியாகராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தாய்ச்சங்க பொருளாளர் சமூகசேவகர் கணபதிப்பிள்ளை துரைநாயகம் மற்றும் தாய்ச்சங்க நிர்வாக உறுப்பினராகிய குமாரவேல் தர்மபாலன் சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாணத் தலைவர் மு.விமலநாதன் செயலாளர் திருமதி ரொமிலா செங்கமலன் பொருளாளர் பாவாணர் அக்கரைப்பாக்கியன உபதலைவர் கண.வரதராஜன் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

சுவிஸ் உதயம் அமைப்பிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இதன்போது பாடசாலையில் உள்ள பல்வேறு குறைபாடுகள் சங்கதின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன் அவற்றில் சில குறைபாடுகளை தீர்த்து தருவதாக இங்கு உறுதியளிக்கப்பட்டது.

# மட்டக்களப்பு பழனி ஆண்டவர் ஆலய நிருவாகத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு!!



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பழனி ஆண்டவர் ஆலய நிர்வாகத்தினால் வருடாந்தம் முன்னெடுத்து வரும் கல்வி மேம்பாட்டு நடவடிக்கையின் கீழ் 2023 ஆண்டு சிவராத்திரி தினத்தினை சிறப்பிக்கும் வகையில் நலிவுற்ற குடும்பங்களில் பாடசாலை செல்லும் மாணவர்களின் கற்றல் செயல்பாட்டினை மேம்படுத்தும் வகையில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு போதனை வைத்தியசாலையின் பழனி ஆண்டவர் ஆலய செயலாளர் டி.ரஜினிகாந்த் ஏற்பாட்டில் வைத்தியசாலை தாதிய முகாமையாளரும் பழனி ஆண்டவர் ஆலய தலைவருமான நாகலிங்கம் சசிகரன் தலைமையில் நடைபெற்ற மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பழனி ஆண்டவர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ நித்தியானந்த பகிரத சிவம், போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி.கலாரஞ்சனி கணேஷ்லிங்கம், புதூர் விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆலய நிருவாக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



## சொல்லத் துடிக்குது மனசு: 03



*கல்யாண சமையல் சாதம்*
*கறிகளும் பிரமாதம் - அதை*

*உண்டபின் கடு முடுப்பு*
*உடலுள் வந்திடுமே உபாதை.*

இன்றைய பெரும்பாலான திருமண வீடுகளில் சமையல்காரர்களைக் கொண்டே உணவு சமைக்கப்படுகின்றன. சமையல்காரரின் சிட்டையின் அடிப்படையில் அவர் சொல்லிய கடையில் பெரும்பாலும் பொருட்கள் கொள்வனவு செய்யப்படும். அதில் புரொயிலர் கோழி, பாம் எண்ணெய், மாஜரின், மசாலாப் பொருட்கள், சிற்றிக் அசிட், அஜினோ மோட்டோ, வெனிலா, கலரின், சிக்கின் கியுப், தக்காளி சூஸ், உப்புத் தூள், வினாகிரி ஆகிய சுவை ஊட்டிப் பொருட்கள் முக்கிய இடம் பெற்றிருக்கும். இப்பொருட்களில் பெரும்பாலானவை மனிதர்களை மரண வாயிலுக்கு அழைத்துச் செல்லும் மெல்லக் கொல்லும் விசம் கொண்டவை. இவையெல்லாம் இட்டுச் சமைப்பதன் மூலம் உணவு சுவை, மணம், குணம் கொண்டதாக இருக்கும். அதனை உண்பவர்கள் சமையலைப் பற்றிப் பழக வேண்டும். அதனால் தனது புகழ் பெருகும். ஓடர்களும் . அதிகரிக்கும் அதனால் திருமண வீட்டுச்சமையலை உண்பவர்கள் விரைவில் நேயாளியாகி , உபாதைப்பட்டு மரண வாயிலுக்குச் செல்வதற்கு ஆயத்தமாகுவர்.

தற்காலங்களில் கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் திருமண விருந்துபசாரங்களில் வழங்கப்படும் புறியாணிச் சாப்பாடு ஒன்றை உண்பதனால் ஏழு நாட்களுக்கு ஆயுள் குறைவதாகவும் ஒரு ஐஸ்கிறீம் உண்பதனால் ஒரு நாளும் 175 மில்லி மென்பானம் குடிப்பதனால் ஒரு நாளுமாக மொத்தம் ஒன்பது நாட்கள் ஆயுள் குறைவாகதாக ஆய்வு ஒன்று குறிப்பிடுகின்றது. புறியாணிச்சாப்பிட்டில் எண்ணெய், மாஜரின், சில நிற இரசாயனப் பொருட்கள் கலந்திருப்பதனால் அவ்வுணவு எளிதில் சமிபாடடைவதற்கு. சுடு தண்ணீர் குடிக்க வேண்டும். அல்லது யோக்கட் சாப்பிட வேண்டும். திருமண விருந்துபசாரத்தில் அவ்வாறு வழங்கப்படுவதில்லை. மென்பானமும் ஐஸ்கிறீமும் உணவுச் சமிபாட்டைத் தாமதப்படுத்தும். இரைப் பைக்குள் சென்ற உணவு அங்கிருந்து ஒரு பந்து போல் சிறுகடலைச் சென்றடையும். அதனைச் சமிபாடடையச் செய்வதற்காகச் சிறுகுடல் பல சுரப்புக்களைச் சுரந்து தன் பணியைச் செய்யும். இரைப் பை, சிறுகுடல் இரண்டும் களைப்படையும். உடல் சோர்வடையும். அதனால் அடிக்கடி தண்ணீர் பருக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அவ்வுணவு சமிபாடடைய ஏறக்குறைய பத்து மணித்தியாலம் வரை எடுக்கும். அதுவரை வயிறு கறுபுறு என்றிருக்கும். அதனைப் புறியாணி உணவு உண்ட சகலரும் உணர்வார்கள். இவர்களுள் சிலருக்கு இரவு உணவும் தேவைப்படாது. சமிபாடு தாமதமாவதால் பசி வராது. நமது இன்றைய நிலைக்கு நாமே காரணம் என்பதை அவர்கள் கிஞ்சித்தும் உணர்வதிலை. உண்பவர்களுக்குத் தேவை சுவையான உணவு மாத்திரமேயொழிய தமது உடல் நலமல்ல. நாம் உண்ணும் சாதாரணமான உணவுகள் ஆறு மணித்தியாலத்துக்குள் சமிபாடடையும். ஆனால் புறியாணி, கொத்து ரொட்டி, பிறைட் ரைஸ், பீட்சா போன்ற உணவுகள் அவ்வாறல்ல. உடலுக்கு உபாதை தரக்கூடியவை. உடல் ஒரு பொக்கிசம் என்பதையும் மறந்து, நாம் நோயாளி ஆகுவதற்கென்றே உண்கின்றனர்.

இத்தகைய உணவுகளால் சிறு குடலின் உள்னே இருக்கும் சில இளையங்கள் தேய்வடைந்து குடல் புண்(அல்சர்) ஏற்படுவதற்கான சாத்தியங்களும் அதிகரிக்கும். நாள்பட்ட குடல் புண்ணால் காலப்போக்கில் குடல் புற்று நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கும். சமிபாட்டுக்குத் தேவையானதும் மேலதிகமாதுமான நொதியங்களைப் பித்தப்பை சுரப்பதனால் பித்தப்பை பலவீனமடையும். காலப் போக்கில் பித்தப்பையுடன் தொடர்புபட்ட நோய்களும் ஏற்படலாம். அத்தோடு ட்ரானஸ் கொழுப்பு (எண்ணெய்-பொரியல், தாளிப்பு), சதுரேட்டட் கொழுப்பு (பால், மீன், முட்டை,, இறைச்சி, ஐஸ்கறீம், சீஸ், மாஜரின்) ஆகியவற்றால் உடலில் பாதகமான கொழுப்பு அதிகரித்து இதயம் பலவீனமடையும். அதன் விளைவாக உயர் குருதி அழுத்தம், கொலஸ்ரோல் அதிரித்துக் காலப்போக்கில் மாரடைப்பு மரணம் ஏற்படுவதற்கும் வாயப்புக்கள் உள்ளன. மேலும் இவ்வகைப்பட்ட புறியாணி, கொத்து ரொட்டி, பிறைட் ரைஸ், பீட்சா போன்ற உணவினை மாதத்துக்குப் பத்து நாட்களுக்கு மேல் உண்பவர்களுக்குச் சிறுநீரகம் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களும் அதிகம் உளளது.

175 மில்லி மென்பானத்தில் கலக்கப்படும் கலரிங், எசெனன்ஸ், மூன்று தேக்கரண்டிச் சீனி, போத்தலுள் காஸ்ஸை உருவாக்குவதற்காக உள்ளடைக்கப்படும் காபனீரொட்சைட்டு வாயு (கரியமில வாயு) ஆகியன சமிபாட்டைத் தாமதமடையச் செய்வதோடு பல நாட்பட்ட நோய்களுக்கும் காரணமாக அமைகின்றன. கலரிங் புற்று நோய்க்கும், சீனி எசென்ஸ் ஆகியன நீரிழிவு நோய் மற்றும் சிறுநீரகப் பாதிப்புக்கும் காரணமாக அமைந்து விடுகின்றன. அத்தோடு ஐஸ்கிறீமில் உள்ள பால், எசென்ஸ, வெனிலா, இரண்டு அல்லது மூன்று தேக்கரண்டிச் (15 கிராம்) சீனி ஆகியன உணவுச் சமிபாட்டைத் தாமதப்படுத்தி உடலில் கொழுப்புச் சேர்வதற்கும், நீரிழிவு மற்றும் சிறுநீரகப் பாதிப்பு ஆகியவற்றுக்கும் காரணமாக அமைகின்றன. வருடாந்தம் இலங்கையில் ஏற்படும் மரணங்களில் 68 வீதமானவை இத்தகைய தொற்றா நோய் காரணமாகவே நிகழ்கின்றன. மரணவாயிலுக்குச் செல்லும் வரை வைத்தியசாலை, சிகிச்சை நிலையம் என மருந்தும் கையுமாகத் திரிவர். அந்த மருந்தும், பக்கவிளைவுகளும் காலப்போக்கில் உடல் உபாதைக்கு உள்ளாக்கிப் படுக்கையில் போட்டு அவர்களைக் கொன்றுவிடும். எல்லோரும் நோயாளியாக இருந்தால் வைத்தியருக்கும் சிகிச்சை நிலையங்களுக்கும் வருமானம் அதிகரிக்கும்.

அதனால்தான் திருமண வீட்டிலிருந்து வந்த அழைப்பினை மரண ஓலையொன்று வந்தது. எனப் பிரபல கவிஞர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

*இது மாத்திரமல்ல இன்னு உண்டு*
*இன்பமே கதியென்று*
*வாழ்ந்தீப்போர்*
*இன்பத்தைப் பருகி*
*கதிகெட்டு வாழ்ந்திருப்பர் - அவர்*
*இலக்கணத்தைக் கரம்பிடித்*
*தால் சுகமுண்டு தமக்கு*



**சோலையூர்க் குருபரன்**

**மரண ஓலை உபாதை தொடரும்.**

# ஹிதாயன்ஸ் கிண்ணம் 97 வசம்



**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

மீராவோடை அல் ஹிதாயா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் அணிகள் பங்குபற்றிய ஹிதாயன்ஸ் கிரிக்கெட் தொடரை 97 ஆம் ஆண்டு அணி சுவீகரித்துக் கொண்டுள்ளது.

குறித்த முக்கோண தொடரில் 1997, 1999, 2001 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர மாணவர் அணியினர் பங்குபற்றினர்.

முக்கோண சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி வெள்ளிக்கிழமை (24) மாஞ்சோலை அல் ஹிரா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் 97,99 ஆகிய இரண்டு அணிகள் மோதிக் கொண்டன.



இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய 97 அணியினர் 15 ஓவர்கள் முடிவில் 8 விக்கட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய 99 அணியினர் 13 ஆவது ஓவரில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 59 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியை தழுவிக் கொண்டனர்.

சுற்றுத் தொடரின் வெற்றிக் கிண்ணம் வழங்கி வைக்கும் நிகழ்வில் அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளருமான வீ.ரி. அஜ்மீர், கந்தளாய் வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.மர்சூக், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் எம்.பி.எம்.நபீர் மற்றும் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# முதியோர்களுக்கான நடமாடும் மருத்துவ, கண்சிகிச்சை மற்றும் நிவாரண உதவி வழங்கல்





மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முதியோர்களுக்கான கண் சிகிச்சை மற்றும் தொற்றா நோய்களுக்கான பரிசோதனை, மருத்துவ முகாம் மற்றும் நிவாரண உதவி வழங்கல் நிகழ்வு பிரதேச செயலாளர் கே. தனபால சுந்தரமின் வழிகாட்டலில் கடந்த இரண்டு நாட்களாக (22,23 மற்றும் 24) மூன்று கட்டங்களில் இடம் பெற்றது.

இம்முகாம்கள் ஹெல்பேஜ் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலகத்தின் சமூக சேவை பிரிவின் ஏற்பாட்டில் முதற்கட்ட முகாம் ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்தின் கலாசார மத்திய நிலையத்திலும், இரண்டாம் கட்டம் பெரிய புல்லுமலை கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திலும், மூன்றாம் கட்டம் மட்டக்களப்பு உறுகாமம் சரஸ்வதி வித்தியாலயத்திலும் நடைபெற்றது.

இதில் 55 வயதிற்கு மேற்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வந்தாறுமூலை கிழக்கு மற்றும் மேற்கு, பெரிய உறுகாமம், கோப்பாவெளி, உறுகாமம், கித்துள் போன்ற பிரதேச வயோதிபர்கள் இம்முகாம்களில் சிகிச்சை பெற்றார்கள். அவர்களுக்கு உடல்பருமன் சுட்டெண் கணிப்பிடப்பட்டதுடன், உணவுப் பழக்கவழங்களில் பின்பற்றுவதற்கான முறைகளும், ஆலோசனைகளும் தெளிவுபடுத்தப்பட்டன.

அத்துடன் இவர்களுக்கான கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவசியமானவர்களுக்கு மூக்குக்கண்ணாடி பெறுவதற்கான சிபாரிசுகள் மற்றும் தொற்றா நோய்களுக்கான மருந்துகளும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் பி. டி. மலேஸ்வரன், கண் சிகிச்சை மற்றும் தொற்றா நோய் வைத்தியர்கள், ஹெல்பேஜ் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# புற்றுநோய் வருமுன் காப்போம் பேசாலையில் யாழ் புற்றுநோய் சத்திரசிகிச்சை பிரிவு விழிப்புணர்வு

**(வாஸ் கூஞ்ஞ)**

யாழ் புற்றுநோய் சத்திரசிகிச்சை பிரிவானது 'கென்' என அழைக்கப்படும் வடக்கு கிழக்கு பிரிவுக்கான புற்றுநோயாளர்களுக்கான அமைப்பு மற்றும் கனடாவில் இயங்கும் யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் படிப்புக்களை முடித்துக் கொண்டு கனடாவில் இயங்கிவரும் வைத்தியர்களைக் கொண்ட இவ் அமைப்பானது இங்குள்ள சுகாதார பகுதினருடன் இணைந்து அதிகமாக பரவிவரும் புற்றுநோயாளர்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் மன்னார் பேசாலையில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

தற்பொழுது பலவிதமான நோய்களுக்கு பலர் உள்ளாகி வருவதைக் கவனத்தில் எடுத்து வட கிழக்கு மாகாணங்களில் பொது மக்கள் நோய் வருமுன் காப்பாற்றப்பட வேண்டும் என்ற சிந்தனைக் கொண்டு தூரநோக்கின் செயல்பாடாகவே யாழ் போதனா வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் தாதியர்கள் அடங்கிய குழுவினர் இவ் நிகழ்வில் கலந்துகொண்டு செயல்பாட்டை முன்னெடுத்தனர்.

ஞாயிற்றுக்கிழமை (26.02.2023) பேசாலை மன்.சென்.மேரிஸ் வித்தியாலயத்தில் மதியம் 12.30 மணி தொடக்கம் புற்றுநோய்க்கானவிழிப்புணர்வு நிகழ்வும் பரிசோதனைகளும் அத்துடன் கண் மற்றும் பொது மருத்துவ பரிசோதனைகளும் நோயாளர்களுக்கு இடம்பெற்றன.

நடமாடும் இலவச சேவையாக மேற்கொள்ளப்பட்ட இவ் மருத்துவ முகாமில் புற்றுநோயாளர்களுக்காக இயங்கி வரும் 'கென்' அதாவது வடக்கு கிழக்குக்கான புற்றுநோயாளர்களுக்கான அமைப்பின் தலைவியாக லண்டனில் வசிக்கும் வைத்திய கலாநிதி திருமதி கமலா அருணாசலம் , யாழ் வைத்திசாலை புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபணர் வைத்திய கலாநிதி ஸ்ரீதரன் , யாழ் வைத்திசாலை புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபணர் வைத்திய கலாநிதி தனேந்திரன் , யாழ் வைத்தியசாலை பெண் புற்றுநோயாளர்களுக்கான அறுவை சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி தனுஷா ,கிழக்கு பகுதி நோயியல் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி அகிலன் மற்றும் குடும்ப நல வைத்திய நிபணரும் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான வைத்திய கலாநிதி அருலாணந்தம் ஆகியோருடன் மேலும் சில வைத்தியர்களும் தாதியரும் இவ் மருத்துவ முகாமில் கலந்து கொண்டு நோயாளர்களுக்கும் கலந்து கொண்ட பொது மக்களுக்கும் புற்றுநோய் தொட்பான சிறந்த விளக்கங்களும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.



இவ்மருத்துவ முகாமில் இருநூறுக்கு மேற்பட்ட நோயாளர்கள் பயன்பற்றுச் சென்றதும் குறிப்பிடத்தக்கது.

# 34 வருட அரசசேவையிலிருந்து கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் ஓய்வு

34 வருட அரசசேவையிலிருந்தும் கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிதி) பதவியில் இருந்தும் திரு. சிங்கநாயகம் குலதீபன் அவர்கள் 28.02.2023 அதாவது இன்று ஓய்வு பெறுகின்றார்.

திரு.சிங்கநாயகம் குலதீபன் அவர்கள் தனது 34 வருட அரச சேவையிலிருந்தும் கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிதி) பதவியில் இருந்தும் நிகரற்ற சேவைகளை செம்மையாக பூர்த்தி செய்து 28.02.2023 ஆம் திகதி இன்று ஓய்வு பெறுகின்றார். இவர் காவலாள் கண்ணகியும் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையாரும் கோயில் கொண்ட பதியாம் களுவாஞ்சியூரில் சிங்கநாயகம் சரோஜா அவர்கள் செய்த தவப்பயனால் 02.07.1962 ஆம் ஆண்டு சின்னக் கவுத்தன்குடி மரபில் வந்துதித்தவராவார்.

இவருடைய துணைவியார் ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை ரட்னாதேவி அவர்களை கரம்பிடித்து இல்லற வாழ்க்கையில் இனிதாய் யதுசிகன் அவர்களை மகனாக ஈன்றெடுத்து அவர் செய்த சேவையின் நிமிர்த்தம் தன்னுடைய மகன் யதுசிகன் அவர்கள் Bsc(Hons) UK, M Res in oncology(Dist)UK, PHD in Cancer Research in Immunology (Reading) USA இவ்வாறு உயர் தகமையைக் கொண்ட மகனை பெற்றெடுத்த பெருமை திரு.சி.குலதீபன் ரெட்னாதேவி அவர்களையே சாரும்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை 1-5 வரை மட் /களுவாஞ்சிகுடி சரஸ்வதி வித்தியாலயத்திலும் இடைநிலை வகுப்பான 6 - 7 வரை மட் / சிவானந்தா மகா வித்தியாலயத்திலும் 8 தொடக்கம் க.பொ.த (உ/த) வகுப்பு வரை மட்/பட்/பட்டிருப்பு ம.ம. வித்தியாலயம் தேசியபாடசாலை களுவாஞ்சிகுடியிலும் கற்றுள்ளார். மேலும் இவர் மட் /பட் / பட்டிருப்பு ம.ம வித்தியாலயம் (தே.பா) களுவாஞ்சிகுடியில் தனது க.பொ.த (உ/த) வர்த்தகப்பிரிவில் கல்வி கற்று சித்தியடைந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு 1982 முதல் 1986 வரை வியாபார நிர்வாகம் எனும் பட்டத்திற்கான கற்றலை வர்த்தக பீடத்தில் மேற்கொண்டு பட்டத்தை தமதாக்கிக் கொண்டதோடு 2017ஆம் ஆண்டு ருணடிஎநசளவைலழக ஊழளவய சுடிஉய பல்கலைக்கழகத்தில் முதுமாணிப்பட்டத்தையும் நிறைவு செய்திருந்தார். மற்றும் தொழில்சார் தகமைகளாக இலங்கை கணக்காளர் சேவை உறப்பினராகவும் இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்ப நிறுவன அங்கத்தவராகவும் இலங்கை பட்டய பொது நிதி நிறுவனத்தின் சிரேஷ்ட அங்கத்தவராகவும் சிறப்பாக செயற்பட்டு கணக்காளர் சேவையில் தடம் பதித்த ஒரு கடமையுணர்வுமிக்க கணக்காளராவார் இவர் ஆரம்பத்தில் ஆசிரியர் நியமனம் பெற்று தான் கற்ற பாடசாலையான மட் பட்டிருப்பு ம.ம. வித்தியாலயம் களுவாஞ்சிகுடியில் கடமையாற்றி மாணவச் செல்வங்களுக்கு கற்றல் பணியினை மேற்கொண்டு பல மாணவர்களை வர்த்தகப்பிரிவில் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய பெருமையும் இவரைச் சாந்து நிற்கின்றது.

பின்னர் கணக்காளர் சேவை தெரிவுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி 1992 ஆம் ஆண்டு முதல் 1996 வரை ஆரயம்பதி பிரதேச செயலகத்திலும் 1996 முதல் 2004 ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும் கணக்காளராக சிறந்த சேவைகளை வழங்கியிருந்தார். தொடர்ந்து 2004 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை கொழும்பில் சுகாதார அமைச்சில் மருத்துவ வழங்கல் பிரிவில் பிரதிப் பணிப்பாளராகவும் (நிதி விடயங்களுக்கு) கடமையாற்றியதோடு 2013 - 2014 ஆம் ஆண்டு வரை சுகாதார அமைச்சு கொழும்பில் நிதி விடயங்களுக்கு பணிப்பாளராகவும்2014 முதல் 2021 வரை கல்வி அமைச்சில் கல்விவெளியீட்டுத் திணைக்களத்தில் பிரதம கணக்காளராகவும் கடமையாற்றி இறுதியாக 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 28.02.2023 வரை கிழக்கு மாகாணத்திற்கான பிரதி பிரதம செயலாளர் (நிதி) போன்ற பதவிகளை தனது புலமையினாலும் ஆளுமையினாலும் வகித்திருந்தார். கணக்காளர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு முதல் முதலில் நியமிக்கப்பட்ட அதிகாரி என்ற வகையில் மட்டக்களப்பு பிரதேசம் பெருமை கொள்கின்றது. இத்தகைய பெருமைக்குரியவர் திரு. சிங்கநாயகம் குலதீபன் அவர்களே ஆகும்.



இவர்தனது பதவிக்காலங்களில் பயிற்சிக்காகவும் மாநாடுகளுக்காகவும் பல நாடுகளுக்கு சென்று வந்துள்ளார். தனிப்பட்ட விடயமாகவும் புலமை பரிசில் கிடைத்தும் சென்று வந்துள்ளார். அதாவது சென்ற நாடுகளான அமெரிக்கா, கனடா ஐக்கிய இராட்சியம், ஜேர்மனி, கொரியா, ஜப்பான், பிரான்ஸ், டென்மார்க், சுவிடன், சுவிஸ்லாந்து, மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தியா ஆகிய நாடுகளுக்கு சென்று தனது அனுபவங்களை எமது நாட்டில் பல அமைச்சுக்கள், திணைக்களங்களில் பகிர்ந்துள்ளார்.



இவர் கல்வி அமைச்சில் கடமை புரிந்த வேளை பல்வேறுபட்ட கல்விச் சேவைகளைசளைக்காமல் செய்து முடித்துள்ளார். தான் கற்ற பாடசாலைக்கு அதாவது மட் /பட் /பட்டிருப்பு ம.மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை களுவாஞ்சிகுடியில் பாரிய கட்டிட நிர்மாணங்களையும் ஆளனி பௌதீக வளங்கள் என பல அபிவிருத்தி திட்டங்களை செய்துள்ளார் அதாவது ஆரம்பப்பிரிவு மூன்றுமாடி கட்டடம் நவீன முறையில் நிர்மாணித்துள்ள விளையாட்டரங்கம் மற்றும் விளையாட்டு மைதானம் சுற்றிவரவுள்ள மதில்கள் மற்றும் கட்டிட திருத்த வேலைகள் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மற்றும் க.பொ.த (உ/த) தொழில் நுட்ப பிரிவினை உரிய அதிகாரிகளை தொடர்பு கொண்டு பெற்றுத்தந்தமை மற்றும் அதற்கான ஆசிரியர்கள் ஏனைய ஆசிரியர் வளங்களையம் வழங்குவதற்கு உரிய அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு நிறைவேற்றியுள்ளார். இச் சேவை யாராலும் என்றும் எப்போதும் மறக்கவே முடியாது இவருக்கு உறுதுணையாக நின்று தேவைகளையும் ஆலோசனைகளையும் வழங்கிய அக்காலப்பகுதியில் மேற்படி பாடசாலையில் பிரதி அதிபராக கடமையாற்றிய திரு. நாராயணபிள்ளை நாகேந்திரன் ஆகிய நான் அவர்களோடு பூரண ஒத்துழைப்புக்களை நல்கியிருந்;தமை குறிப்பிடத்தக்கவையாகும்.

சிங்கநாயகம் குலதீபன் அவர்கள் தான் கற்ற ஆரம்ப பாடசாலையான மட்ஃகளுவாஞ்சிகுடி சரஸ்வதி வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை அடிக்கடி வழங்கியதுடன் ஒன்று கூடல் மண்டபத்திற்கும் நிதியினை பெற்றுக்கொடுத்திருந்தார். இவற்றுடன் களுவாஞ்சிகுடி விநாயர் வித்தியாலயத்திலும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கியமை தனது தந்தை ஆசிரியராக இருந்து செய்த மகத்தான சேவையின் பால் வெளிப்படுகின்றது. இவை மட்டுமல்ல பல்வேறு சமூக சமய சுகாதார சேவைகளையும் மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் ஆலயங்களுக்கும் புரிந்துள்ளார்.

மட்டக்களப்பு லயன்ஸ் கழகத்தின் மூலம் பின்தங்கிய பிரதேச மாணவர்களின் கல்விக்காக கற்றல் உபகரணங்களை அதிகமாக மாணவர்களுக்கு வழங்கியதுடன் வைத்தியசாலை சேவைகளையும் ஒழுங்குபடுத்திக் கொடுத்திருந்தார். மற்றும் களுவாஞ்சிகுடி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயங்களின் புணர்த்தான வேலைகளுக்கு நிதிகளையும் வழங்கி ஆலய பரிபாலன சபையினருக்கு ஒத்துழைப்புகளையும் நல்கியுள்ளார். எனவே இவருடைய இத்தகைய சேவைகளை என்றுமே அளவிட்டுக் கூறமுடியாது. அவர் செய்த பணிகளின் மகத்துவத்தை சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும்; மக்கள் மனதிலும், அதிகாரிகள் மனதிலும் மாணவர்கள் மனதிலும் என்றுமே நீங்காதவையாகவே தடம் பதிக்கும். இவருடைய ஓய்வுக் காலங்களில் மனைவி மகனோடு சீரும் சிறப்புமாக எந்த வித நோய் நொடிகள் இன்றி பல்லாண்டுகாலம் ஆல் போல் தளைத்து அறுகதுபோல் வேர் ஊன்றி மூங்கில் போல் சுற்றும் முகியாமல் வாழ்வீரே என வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி கலைச்சுடர், இலக்கிய வித்தகர்**
**நாராயணபிள்ளை நாகேந்திரன் (JP)**
**ஓய்வு நிலை அதிபர்**
**களுவாஞ்சிகுடி**

# தமிழரசுக்கட்சி இன்று தமிழ் அரசியல் தரகர்களின் கட்சியாக மாற்றப்பட்டிருக்கின்றது

(சுமன்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடக்குமா அல்லது ஒத்தி வைக்கப்படுமா என்பதற்கு அப்பால் தமிழ் மக்களுக்கு இன்றுள்ள கேள்வி ஓர் ஒன்றுபட்ட தேசமாக நாங்கள் தொடர்ந்து எழுந்துநிற்கப் போகினறோமா அல்லது எங்களுக்குள்;ளே ஏற்பட்டுள்ள பிரிவுகள் பிளவுகள் காரணமாக எமது ஒற்றுமை தூரத்துக் கனவாகத் தொலைந்து போவதற்கு நாங்கள் அனுமதிக்கப்போகின்றோமா என்பதே.

சிங்களப் பெருந்தேசியவாதம் தமிழ் மக்களது உரிமைகளை வழங்கி தமிழ் மக்களை சமத்துவமாக நடத்தும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கு அறவே கிடையாது. சிங்களப் பௌத்த பேரினவாதம் ஒருபோதும் தன்னை மாற்றிக்கொள்ளத் தயாரில்லை என்பதைத் தான் மாகாணத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலாவது சுயாட்சியை வழங்குகின்ற, திருப்தி அளிக்கப்படாவிடினும் அதிகாரப் பங்கீட்டின் அடிப்படையிலே குறிப்பிடத்தக்க அதிகாரங்களை சில துறைகளிலாவது மாகாணங்களுக்கு வழங்குகின்ற இலங்;கை இந்திய ஒப்பந்தத்தில் கொண்டுவரப்பட்ட 13வது திருத்தத்தைக் கூட ஏற்றுக்கொள்ள மறுப்பதில் இருந்து புலப்படுகின்றது.

வழக்கமாக தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகள் எழுப்பப்படுகின்ற போதெல்லாம் அவற்றைத் தோற்கடிப்பதற்காக பௌத்த மத பீடங்களையும். அதனைச் சார்ந்த பௌத்த பிக்குகளையும் தூண்டிவிட்டு நாட்டிலே இனவாதக் கோசங்களை எழுப்பி அதனூடாக தமிழ் சிங்கள மக்கள் மத்தியிலே துளிர்விட்டு எழத்தொடங்கிய ஒற்றுமை உறவைக் கூட கிடைத்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் சிதைப்பதிலே வெற்;றி கண்டு வந்திருக்கின்றது. அதேபோல் இந்தப் பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் இன்றைய வாரிசுகள் இந்தப் 13வது திருத்தத்திற்கு எதிராக தொடர்ந்து போர்க்கொடியை ஏந்தியிருக்கின்றார்கள்.

13வது திருத்தத்தை தமிழினம் ஒருபோதும் தன்னுடைய தேசிய அபிலாசைகளைத் திருப்திப்படுத்துகின்ற திட்டமாக ஏற்றுக்கொண்டது கிடையாது என்பது நியாயமாகச் சிந்திக்கின்ற அனைத்துத் தமிழ் மக்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆனாலும் தமிழ மக்கள் தற்போது எதிர்கொள்கின்ற ஜீவாதாரப் பிரச்சனைகளுக்கு ஏதுவாக 13 வது திருத்தத்தை முழுமையாக அமுல்;படுத்தக் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளும் தமிழரசுக் கட்சியும் இணைந்து இந்திய அரசாங்கத்திடம் தெரியப்படுத்தியிருக்கின்றோம்.

13வது திருத்தத்தை அமுல்ப்படுத்துவதற்கு சிங்;கள பௌத்த தரப்பிலே மனம் கிடையாது என்பதையே அவர்கள் மீண்டும் மீண்டும் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்;. இலங்கை இனப்பிரச்சனைக்கான தீர்வு சமஸ்டி முறைமையே என்பதை ஆண்டாண்டு காலமாகச் சொல்லி வரும் தமிழ் மக்களும் சரி தமிழ் தேசியம் சார் கடசிகளும் சரி இந்த சந்தர்ப்பத்திலே மீண்டும் அதனை வலியுறுத்துகின்றது.

ஆனால் தமிழரசுக் கட்சி என்ன செய்கின்றது. இலங்கை பொருளாதார ரீதயில் நலிவடைந்துள்ள நிலையில் உலக நாடுகள் அனைத்தினதும் தயவிலே மூச்சு விட்டுக் கொண்டிருக்கின்ற இலங்கையின் அரசியல் வரையறைக்குள்ளும் கட்மைப்புக்குள்ளும் இந்தத் தர்வு அரசியலலமைப்பில் மாற்றப்பட வேண்டும். ஒற்றையாட்சிக்குப் பதிலாக பல்வேறு இனங்கள் வாழும் நாட்டிலே சமஸ்டி ஆட்சி ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரே நிலைப்பாட்டில் ஒற்றமையாக வலியுறுத்த வேண்டிய இந்த நிலையில் எங்கள் மத்தியிலுள்ள சில கட்சிகள் எதிராகச் செயற்பட்டு வருகின்றார்கள். இதில் முன்னணியில் நிற்பது தமிழரசுக் கட்சி.

இன்று இந்த உள்ளூராட்சித் தேர்தலிலே தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிடுவதாக எடுத்த முடிவின் காரணமாக அது விலகிச் சென்றிருந்தும் கூட மக்களை ஏமாற்றுவதற்காக தேர்தல் முறை காரணமாக ஆசனங்களை அதிகமாகப் பெறுவதற்காக கணித ரீதயான அடிப்படையில் தான் போட்டியிட முன்வந்;திருக்கின்றோம் என்ற காரணத்தை மக்கள் முன் வைத்திருக்;கின்றார்கள். இதனைத் தமிழ மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். நாங்கள் ஐந்து தமிழ் கட்சிகள் தமிழர்களின் அபிலாசை ஒன்றாக ஒரே நிலைப்பாட்டில் வலியறுத்தப்பட வேண்டும் என்ற காலத்தின் கடப்பாட்டுக்கும், தேவைக்குமாக இன்று ஒரணியிலே குத்துவிளக்குச் சின்னத்தில் நின்று கொண்டிருக்கின்றோம்.

## தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பில் நடத்திய ஊடக சந்திப்பு




13வது திருத்தத்தில் காணி அதிகாரங்கள் பற்றி பேசுவதற்கு ஜனாதிபதி தயாராக இருக்கின்றார். ஆனால் பொலிஸ் அதிகாரங்கள் என்ற ரீதியில் மாகாண மட்டத்திலே இருக்கின்ற தமிழ் இளைஞர் யுவதிகளிடம் துப்பாக்கிகள் இருக்கக்கூடிய நிலைமையை கனவிலும் சிந்திப்பதற்கு ஏனைய பௌத்த பேரினவாதிகளைப் போல் அவர் தயாராக இல்லை. இந்த நிலையில் தான் தமிழினத்தின் ஒற்றுமை தொடர்பான அவசியம் மிக அவசரமாகத் தேவைப்படுகின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் கிழக்கு மண்ணிலே 30 வீதமான நிலப்பரைப்பை நாங்கள சிங்களக் குடியேற்றங்கள் மூலமாக

## 13வது திருத்தம் சிங்களப் பேரினவாதத்திற்கு எமது தரப்பிலே வைக்கப்பட்டிருக்கின்ற ஒரு அமிலப் பரீட்சை

இழந்திருக்கின்றோம். தற்போதும் எமது தாயக நிலப்பரப்பின் தொடர்ச்சியான திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களின் எல்லைகளில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி சிதைப்பதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த சூழ்நிலையில் தான் நாங்கள் மக்களிடத்தில் ஒரு வேண்டுகோளினை முன்வைக்கின்றோம். ஒற்றுமைக்கெதிராகச் செயற்படுகின்றவர்கள். அதுதமிழரசுக் கட்சியாக இருக்கட்டும் அல்லது பல்வேறு காரணங்களைக் கூறி தொடர்;ந்து தனிக்கட்சியாகச் செயற்பட்:க் கொண்டிருக்கின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக இருக்கட்டும். ஒரே கொடியின் கீழ் தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகள் வலியுறுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படை ஏற்பட்டால் மாத்திரமே இலங்;கைத் தீவுக்குள்ளே நாங்கள் விரும்புகின்ற இணைப்பாட்சியை ஏற்படுத்துகின்ற அழுத்தத்தை இலங்கை அரசுக்குக் கொடுக்க முடியும் என்ற யதார்த்தத்தின் அடிப்படையிலே அவர்கள் எங்களுடன் இணைந்து பயணிப்பதற்குத் தயாராக இல்லை என்றால் இவர்கள் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கப்பட வேண்டும்.

தமிழரசுக் கடசியின் தற்போதைய நிலைமைக்குக் காரணம் 2009ம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் எங்கிருந்தோ வந்து தமிழரசுக் கட்சிக்குள்ளே இடம்பிடித்திருக்கின்ற தென்னிலங்கைப் பின்னணி கொண்ட சில தமிழ்ப் பிரமுகர்கள் என்பதை நாங்கள் பகிரங்கமாக மக்களுக்குச் சொல்ல வேண்டிய தேவை இருகக்கின்றது. இந்த சில நபர்களுக்கு தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் அவர்கள் கனவில் கூட எந்த உறவோ சகவாசமோ இருந்தது கிடையாது.

அவ்வாறானவர்கள் தங்களது சொந்த அபிலாசைகளுக்கா தமிழரசுக் கட்சிக்குள் ஊடுருவியிருக்கின்றார்கள். தற்போது தமிழரசுக் கட்சியின் தலைவராக தனது தொடர்ச்சியான கடுமையான அர்ப்பணிப்பின் ஊடாக விளங்கிக கொண்டிருக்கின்றன மாவை சேனாதிராஜா அவர்களைக் கூட அரசியலில் செல்லாக் காசாக மாற்றுவதிலே அவர்கள் வெற்றி கண்டிருக்கின்றார்கள்.

இந்த அரசியல் சந்தர்ப்பவாதிகள் தமிழரசுக் கட்சிக்குள் ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கும் வரையிலே தமிழரசுக் கட்சி தன்னுடைய போக்கை ஒருபோதும் மாற்றிக் கொள்ளப் போவதில்லை. எங்களுக்குள் இருக்கும் தெரிவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நாங்கள் ஒன்றில் தமிழ்த்



தேசியத்தை விலிறுத்தி வந்திருக்;கின்ற, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திலே இரத்தம் சிந்தி சிறைவாசம் அனுபவித்து தமிழினத்தின் அரசியற் குறிக்கோளை உயர்த்திப்;பிடித்து வந்த அன்றைய இளைய தலைமுறையில் இருந்;து இன்றைக்கு தவைர்களாக வந்திருக்கின்ற பல தமிழ்த் தேசியவாதிகளை முன்னணித் தலைவர்களாகக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமிழ் மக்கள் பலப்படுத்த வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை வலியுறுத்துவதைத் தவிர எங்களுக்கு வேறு வழி கிடையாது.

இது ஒரு நெருக்கடியான காலம் ஒன்றுபட்டால் மாத்திரமே நாங்கள் வாழமுடியும். நாங்கள் ஒற்றுமையாக இருந்தால் தான் தமிழ் மக்கள் தரப்பிலே தியாகம் புரிந்த தலைமுறையினரின் கனவை நாங்கள் நனவாக்க முடியும்.

பதவிகளுக்காக சலுகைகளுக்காக சிங்களப் பேரினவாதிகளோடு சமரசம் நடத்துவதை தங்கள் அரசியல் சாணக்கியமாக மக்களுக்குச் சொல்லிக் கொள்வதையிட்டு வெட்கம் கொள்ளாத தமிழர்கள் தமிழ் மக்களின் தலைவர்களாக இருக்கத் தகுதியற்றவர்களாக தயவு தாட்சன்யமின்றி தூக்கியெறியப்பட வேண்டிய அரசியற் பதர்கள் என்பதை நாங்கள் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

அந்த உரிமை எங்களுக்கு இருக்கின்றது. நாங்கள் ஒன்றும் வானத்தில் இருந்து வரவில்லை. எங்கள் அனைவரதும் அரசியல் வாழ்க்கை தமிழரசுக் கட்சியில் தான் ஆரம்பித்தது. ஆகவே தமிழரசுக் கட்சிக்குள் ஊடுருவியிருக்கின்ற இந்த சந்தர்ப்பவாத அரசியற் பதர்களிடமிருந்து தமிழரசுக் கட்சியைப் பற்றிக் கற்றுக்கொள்வதற்கு எதுவும் கிடையாது. தமிழரசுக் கட்சியின் வரலாறு தெரியாதவர்கள், தமிழரசின் மூத்த தலைவர்களை தங்கள் வாழ்நாளில் கண்டிராதவர்கள். வாலிபர்களாக சுற்றித் திரிந்த காலத்தில் கூட தமிழ் அரசியற் பக்கம் தலைவைத்துப் படுக்காமல், தமிழ் தலைவர்களின் குரலைக் கூட கேட்காமல் இருந்த அந்த நபர்கள் பட்டம் பெற்று, பணம் சம்பாதித்து தங்கள் வாழ்க்கையை ஸ்திரமாக்கிய பிறகு தற்போது சமூகத்தில் ஒரு அரசியல் நிலைமைகள் தேவைப்படுகின்றன என்பதற்காக தமிழரசுக் கட்சிய்ன பெயரில் தனியான கடையை தமிழ் மக்களின் உணர்வுகளைப் பற்றிய கவடிலையின்றி செயற்படுத்தியிருக்கின்றார்கள் என்றால் அதற்கான பதிலடியை மக்களே கொடுக்க வேண்டும்.

சர்வதேச சமூகத்தினுடைய பார்வை இந்தச் சின்னஞ்சிறிய இலங்கை மீது தெடர்ந்து படிந்து கொண்டிருக்கின்ற நிலைமையிலே பொருளாதார நெருக்கடிக்குள்ளே சிக்கியிருக்கின்ற இலங்கை அரசு தனது அன்றாட ஜீவனத்திற்கு, மூச்சு விடுவதற்கு இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் தயவிலே தங்கியிருக்கின்ற நிலைமையிலே சந்தர்ப்பத்தை நாங்கள் பயன்படுத்தியே ஆக வேண்டும். இதைப் பயன்படுத்தத் தவறினால் பாரியதொரு அரசியற் தவறுக்கு நாங்கள் வழிவகுத்தவர்களாவோம்.

இலங்கை சுதந்திரம் அடைந்த போது எமது தமிழ்த் தலைவர்கள்; தனிநாட்டு கோரிக்கையினை முன்வைத்திருக்க முடியும். ஜின்னாவின் வழியில் தனிநாட்டினைப் பெற்றிருக்கவும் முடியும். அந்தச் சிந்தனை எங்கள் தலைவர்களுக்கு இருக்கவில்லை. இணைப்பாடசியைக் கூட எமது தலைவர்கள் கோரத் தவறியிருந்தார்கள். இன்றைக்கும் அப்படியான ஒரு வரலாற்றுத் தவறினை எமது மக்கள் விட்டுவிடக் கூடாது. 13வது திருத்தம் சிங்களப் பேரினவாதத்திற்கு எமது தரப்பிலே வைக்கப்பட்டிருக்கின்ற ஒரு அமிலப் பரீட்சை. அரசியல் சாசன ரீதியான 13வது திருத்தை இன்றைய இலங்கை அரசும், ஜனாதிபதியும்; செய்யத் தயாரில்லை என்றால் தொடர்ந்து இணைப்பாட்சியைப் பற்றிப் பேசுவதற்கோ இலங்கை ஒரு நாடு என்று சிந்திப்பதற்கோ எந்தவொரு யதார்த்த பூர்வமான அடிப்;படையும் இருக்க முடியாது.

எனவே இலங்கை பேரினவாத அரசு இன்றைய சூழ்நிலையிலே நிலைமையை உணர்ந்து யதார்த்த ரீதயிலே பிரச்சனையை அணுகுவதற்கு எதுவான அரசியல் அழுத்தத்தைத் தமிழினம் ஒரே குரலில் ஒரே தலைமையின் கீழ் ஒரே அடிப்படையில் நின்று செயற்படுவதன் ஊடாகத்தான் கொடுக்க முடியும் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த இலங்கைத் தீவு ஒன்றுபட்ட நாடாக நீடித்து நிலைக்க வேண்டுமானால் தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கையான சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டித் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கான அந்தவேளை தற்போது நெருங்கி வந்துகொண்டிருக்கின்றது. ஆனால், அது தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்க முடியாது. சிங்களப் பேரினவாதம் தெடர்ந்து திட்டமிட்டபடி இந்தக் காலத்தைப் பயன்படுத்தி எமது தாயகத்து நிலப்பரப்பு ஒற்றுமையைச் சிதைத்து எமது மண்ணிலே நாங்கள் கையைத் தூக்கவதற்குக் கூட அரசியல் பின்புலத்தைக் கொண்டிருக்காத அரசியல் அநாதைகளாக மாறும் சூழ்நிலை ஏற்படுவதற்கு நாங்கள் இடம் கொடுத்துவிட முடியாது.

ஒன்றில் இப்பொழுது இல்லையென்றால்

# தமிழரசுக்கட்சி இன்று தமிழ் அரசியல் தரகர்களின் கட்சியாக மாற்றப்பட்டிருக்கின்றது

## தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பில் நடத்திய ஊடக சந்திப்பு

எப்பொழுதும் இல்லை என்பதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இப்பொழுது என்பது முதலாவதாக 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவற்கான எமது கோரிக்கைக்கு சிங்களப் பேரினவாதம் அளிக்கும் பதிலையும், அந்தப் பதில் சாதகமாக இருந்தால் தொடர்ந்து இனப் பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வு சுயாட்சி அடிப்படையிலான இணைப்பாட்சி முறையின்கீழ் தான் என்பதையும் நாங்கள் வலியுறுத்துவதற்கான ஒரு சூழ்நிலை. இல்;லையென்றால் தமிழ் மக்களுக்கு முன்னாள் உள்ள ஒரே தெரிவு சர்வதேச சட்டத்தின் கீழ் நாம் ஒரு தனித்தேசம் தனி மக்கள் கூட்டம் என்ற அடிப்படையிலே ஐநா மனித உரிமைகள் பிரகடணத்தின் கீழ் எமது அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலே ஜனநாயக ரீதியாக எங்களுக்கான தெரிவை நாங்கள் மேற்கொள்வதற்கு சர்வதேச சமூகம் கைகொடுத்து உதவ வேண்டும் தமிழினத்தின் சார்பிலே தமிழ்த் தேசத்தின் சார்பிலே தமிழ் ஈழத்தின் சார்பிலே ஒரே குரலில் ஒரே அரசியற் தலைமையின் கீழ் ஒன்றுபட்ட இனமாக நாங்கள் முன்வைப்பதுதான்.

அதற்கு ஏதுவாகத் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆளமான சிந்தனை, ஆலோசனையின் பின் தற்போது ஐந்து கட்சிகளைக் கொண்ட ஒரு அமைப்பாக தொடர்ந்து மக்களின் ஜனநாயக சக்தியாக நின்று கொண்டிருக்கின்றது. அதற்கு எமது மக்கள் சகல வழிகளிலும் ஆதரவு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஆளமாகவும், உறுதியாகவும், நேர்மையாகவும் முன்வைக்கின்றோம்.

**கேள்வி :உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தொழில்நுட்ப ரீதியான அணுகுமுறை எனவும், தேர்தலின் பின்;னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தான் ஆட்சியமைப்பதாகவும் தமிழரசுக் கட்சியினால் கருத்துகள் முன்வைக்கப்பட்டது. இது தொடர்பாக உங்கள் கருத்து?**

பதில் : தொழில்நுட்ப ரீதியாக உள்ளுராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்வதென்பது அனைவரையும் முட்டாள்களாக்குகின்ற கருத்தென்பது அனைவருக்கும் தெரியும். கெட்டிக்காரன் கூத்து எட்டு நாளைக்கு என்பது போல இவர்கள் எதுவித சிந்தனையும் இல்லாமல் பட்டவர்த்தனமான ஒரு விடயத்தை தமிழ் மக்கள் அனைவரையும் முட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டு சொல்லி வருகின்றார்கள். தமிழரசு மத்திய குழுவிலே பல படித்தவர்கள் இருந்தும் கூட அவர்கள் படித்தவர்களாகச் சிந்தப்பதாகத் தெரியவில்லை.

தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு யார் யாரினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்பது அனைவருக்கும் தெரியும். சில பாராளுமன்ற உறுப்பினர்கள், சில கொழும்புத் தமிழர்கள் இன்று மத்திய குழுவைத் தங்கள் கட்டுப்பாடடில் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகள் அவர்கள். தமிழரசுக் கட்சி இன்று பெயருக்குத் தான் தமிழரசுக் கட்சியாக இருந்து கொண்டிருக்கின்றதே தவிர தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளைப் பொருத்த மட்டிலே சமரசம் பேசுகின்ற தமிழ் அரசியல் தரகர்களின் கட்சியாக இன்று மாற்றப்பட்டிருக்கின்றது.

இதனை நீடிக்க விடுவதா இல்லையா என்பதை தமிழரசுக் கட்சியிலே தற்போது நீடித்துக் கொண்டிருக்கின்ற உண்மையான நேர்மையான தமிழரசுத் தொண்டர்களும், விரல் விட்டு எண்ணுமளவுக்கு இருக்கின்ற நீண்ட கால அரசியல்வாதிகளும் சிந்தித்து தீர்மானம் எடுக்க வேண்;டும்.

**கேள்வி : நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்று தனிக் கட்சியொன்றை ஆரம்பித்து செயற்பட்டு வந்தீர்கள். இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை பற்றிக் கதைப்பதற்குக் காரணம் என்ன?**

பதில் : காரணம் நாங்கள் தமிழர்களாக இருப்பது, காரணம் நாங்கள் எமது மக்களை நேசிப்பது, காரணம் நாங்கள் தொடர்ந்தும் தமிழ்த் தேசியவாதிகளாக இருப்பது. 1985, 1986 காலப்பகுதிகளில் ஒரே ஒரு ஆயுதப் போராட்ட இயக்கத்தைத் தவிர மற்றைய பிரதான தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட இயக்கங்கள் எல்லாம் ஒரே அணியாக இருந்தன. பின்னர் பிளவு பட்டன. நடக்கக்கூடாத விடயங்கள் எல்லாம் நடந்தது. இறுதியிலே 2001லே தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வந்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பாக நாங்கள் இணைய வேண்டும், ஒன்றாக செயற்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தபோது நாங்கள் அனைவரும் ஓரணியாக நின்றோம். எனவே ஒற்றுமை என்பது காலத்தினுடைய தேவை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்னரும் பிளவுகளை, வெளியேற்றங்களைச் சந்தித்திருக்கின்றது. அதற்கான காரணங்களை நான் ஆராய விரும்பவில்லை. ஏனெனில் இதைப்பற்றிப் பேசினால் சில தமிழரசுப் பிரமுகர்களை குற்றஞ்சாட்டுவதாக அமையும்.

இன்றைக்கு ஐந்து கட்சிகள் கடந்தகாலத்திலே பல்வேறு காரணத்தினால் ஒன்றாகச் செயற்பட்ட பின்னர் பிரிந்து நின்ற கட்சிகள் தமிழ்த் தேசியக்



கூட்டமைப்பாக ஓரணி திரள முடியுமா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலே தமிழரசுக் கட்சியையும் இணைத்துக் கொண்டு பயணித்த டெலோவும், புளொட்டும் இன்னும் மூன்று கட்சிகளோடு இணைந்து பரந்த அணியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விரிவுபடுத்த முயற்சித்த போது எதற்காக தமிழரசுக் கட்சி தனிக்கடையாக இயங்கத் தீர்மானித்தது என்ற கௌ;வியை அவர்களிடமே கேட்க வேண்டும். இவ்வாறெல்லாம் செய்து கொண்டு தேர்தலின் பின்னர் ஒன்றாக இயங்குவோம் என்று கூறுவது எமது மக்களின் அரசியல்

**எமது ஒற்றுமையே தியாகம் புரிந்த தலைமுறையினரின் கனவை நனவாக்கும்**

வையே கேள்விக்குள்ளாக்குகின்ற விடயம்.

**கேள்வி : தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் உயிருடன் உள்ளார் என்று பழ.நெடுமாறன் கூறிய விடயத்தை எவ்வாறு பார்க்;கின்றீர்கள்?**

பதில் : இந்த விடயத்தைப் பொருத்தமட்டிலே ஏற்கனவே பலரின் கருத்துகளும் முட்டிமோதிக் கொண்டிருக்கும் இந்த விவகாரத்தை நாங்களும் கருத்துக்கூறி மேலும் பெரிதாக்க விரும்பவில்லை. தமிழ்த் தேசியத் தலைவர் வரலாற்றிலே ஒரு மாபெரும் தலைவராக உயர்ந்து நிற்கின்ற சரித்த படைப்பு. அவரைத் தமிழ் மக்கள் நேசித்தார்கள், நேசிக்கின்றார்கள், தொடர்ந்தும் நேசிப்பார்கள். எனவே தற்போது தெரிவிக்கப்பட்டிருக்கின்ற இந்த விடயம் தமிழ் மக்கள் மத்தியிலே இருக்கின்ற உணர்வலைகளிலே பாரிய மாற்றம் எதனையும் கொண்டுவர முடியாது. ஆதாரங்கள் அடிப்படைகள் முன்வைக்கப்பட்டால் நாங்கள் கருத்துக் கூற முடியும். ஆனால் தற்போது சில விடயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த சந்தர்ப்பத்திலே அவை தொடர்பில் கருத்துக் கூற தேவைப்பாடுகள் இருக்காது என்று கருதுகின்றேன்.

**கேள்வி :குறிப்பாக வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுக்குள் முட்டிமோதிக் கொண்டிருக்கின்றன. இதனால் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான சக்திகள் பலமடைகின்றன. தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுக்குள் இருக்கின்ற விமர்சனங்களைக் குறைத்து மற்றையவர்கள் தொடர்பான விமர்சனங்களை முன்வைப்பதனைக் காணமுடியாதுள்ளது ஏன்?**

பதில் : காரணம் மற்றவர்கள் யார் என்பது மக்களுக்குத் தெரியும். ஆனால் அந்தப் பிரசாரமும் வலுவாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதனை நாங்கள் முன்னெடுக்கின்ற போது தமிழரசுக் கட்சி பல பொய்யான விடயங்களை முன்வைத்துக் கொண்டிருக்கின்றது. தமிழரசுக் கட்சி போதாதென்று தம்பி கஜேந்திரகுமார் அவர்கள் தன்னுடைய பாட்டனார் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து முன்வைத்த எந்தக் கோரிக்கையைத் திட்டித் தீர்த்து வந்தாரோ, 1970லே யாழ்ப்பாணத் தொகுதியிலே மூன்றாவது தடவையாகத் தோற்கடிக்கப்படுகின்ற வரையிலே எந்தக் கோரிக்கையைச் சொல்லி வந்தார்களோ, சமஷ்டி ஆட்சிக்கு எதிராக முன்வைத்த கோசத்தை எல்லாம் மறந்து விட்டு ஒற்றையாட்சிக்கு எதிராகத் தான் அகில இலங்;கைத் தமிழ் காங்கிரஸ் செயற்பட்டு வந்திருக்கின்றது என்ற பொய்யை அவர் சொல்லி வருகின்றார் அவர் மீது எனக்கு மரியாதை உண்டு. கஜேந்திரகுமார் பொய் பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியத்திற்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றவர்களை நாங்கள் தமிழ் மக்களுக்கு முன்னாள் தோலுரித்துக் காட்டத் தயங்கப்போவதில்லை. தேர்தல் இன்னமும் பெரிதாச் சூடு பிடிக்கவில்லை. தேர்தல் நடக்கும் என்ற அந்த அறிவிப்பு வெளியானால் அதற்கான தேவை பல மடங்கு அதிகரிக்கும். தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டாலும் கூட இன்னும் ஓரிரு வாரங்களுக்குள்ளே தமிழரசுக் கட்சியை பிரசார ரீதியாக நன்றாகக் கவனித்துக் முடித்துவிடுவோம். அதற்கப் பிறகு எங்களுடைய முழுக் கவனமும் யார் மீது திருப்பப்பட வேண்டுமோ எங்கள் மத்தியிலே கோடரிக் காம்புகளாகச் செயற்படும் தமிழினத்தை வேரோடு அறுப்பதற்கு சில தமிழர்களே துணை நிற்கின்றார்கள் அவர்களுக்கு உரிய பதிலடியை நாங்கள் கொடுப்போம். அந்த விமர்சனங்கள் ஊடாக அவர்கள் மீண்டும் தமிழ் மண்ணிலே தலைதூக்க முடியாத ஓர் அரசியற் சூழ்நிலையை எங்களால் ஏற்படுத்த முடியும் என நாங்கள் நம்புகின்றோம்.

**கேள்வி : ஜனாதிபதி 13வது திருத்தத்தை முன்வைக்கின்ற சந்தர்ப்பத்தில் பிக்குகளினால் பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு 13வது திருத்தம் எரிக்கப்படுகின்றது. இது நடைமுறைப்படுத்தப்பட்டால் நாடு முழுவதும் பற்றி எரியும் என்ற கருத்தையும் முன்வைத்திருக்கின்றார்கள். இந்த நிலைப்பாட்டை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில் : அரசியல் சாசனம் எரிக்கப்பட வேண்டும் என்றால் அதனை எரித்திருக்க வேண்டியவர்கள் தமிழர்களாகிய நாங்கள். இலங்கை அரசியலில் சோல்பரி அரசியல் சாசனமாக இருந்தாலும் சரி அல்லது 1972ம் ஆண்டு வந்த குடியரசின் முதலாவது அரசியல் சாசனமாக இருந்தாலும் சரி, இன்றைய ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் கொண்டுவரப்பட்ட அரசியல் சாசனமாக இருந்தாலும சரி அது எங்களுடைய அடிமை சாசனமாகவே இருந்து வந்திருக்கின்றது.

அந்த சாசனத்திற்குள்தான் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக அதனுடைய கொடுமையைத் தணிக்கின்ற விதமாக 13வது திருத்தம் இருந்து கொண்டிருக்கின்றது. அதனைக் கூட அவர்கள் சகித்துக்கொள்ளத் தயாராக இல்லை. ஆனால் பௌத்த பிக்குகளைத் துண்டிவிடுகின்ற ஒரு கூட்டம் இவற்றையெல்லாம் அரசியலுக்காக வெற்றிகரமாக அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றது.

இவர்களெல்லாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும் தமிழ் மக்களை மீண்டும் தனிநாட்டுக் கோரிக்கையை, தமிழீழக் கோரிக்கையை நோக்கித் தள்ளுகின்ற சூழ்நிலையை தயவு செய்து இந்தப் பௌத்த சிங்களப் பேரினவாதிகள் ஏற்படுத்தி விடக் கூடாது. வெள்ளையர்கள் வெறியேறிய போதும், சிங்களம் மட்டும் மசோதா கொண்டுவரப்படும் போதும் கூட தனிநாட்டுக் கோரிக்கை எழவில்லை. முதலாவது அரசியற் சாசனம் எழுதப்பட்ட போதுதான் தனிநாட்டுக் கோரிக்கை எழுந்தது. தற்போதும் கூட இலங்கை அரசியல் சாசனத்தில் பகுதியும் பாகமுமாக இருந்து கொண்டிருக்கின்ற 13வது திருத்தத்தைக் கூட அவர்கள் தமிழ் மக்களுக்கு விட்டுவைக்கத் தயாரில்லை என்றால் எங்களுக்கு முன்னால் இருக்கின்ற தெரிவு என்ன? இதனை அவர்கள் சிந்திக்கின்றார்களோ இல்லையோ, தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது என்பதே உண்மை.